பதிவுப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப் பெற்றது.

# ௐ இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம்:— தாதுஸ்ரீ ஆடிமீ கருஉ ( 1936 ஜூலாய் 30 ) வியாழக்கிழமை { இலக்கம்—௬௨

## "வெண்பாவில் புகழேந்தி"

### நளன்—தமயந்தி ஒற்றுமை

(பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களின் சொற்பொழிவு)

(முற்றொடர்)

"செம்மனத்தான் தண்ணளியான்
செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தைவாங்குந்தடந்தோ
ளான்—மெய்ம்மை
களனென்பான் மேனிலத்துளானி
லத்துமிக்கான்
உளனென்பான் வேந்தனுக்கு"

"அறங்கிடந்தநெஞ்சமருளொழுகு
கண்ணும்
மறங்கிடந்தநின்றோள்வலியும்—நிற
ங்கிடந்த
செங்கண்மாலல்லனேற் றேர்வேந்த
ரேசப்பரோ
அங்கண்மாஞாலத்தவற்கு"

என்பன நளனைப்பற்றிக் கூறும் வெண்பாக்கள். நளன் ஓர் செம்மனத்தனென்பது புகழேந்திப் புலவரது முடிவு. அதனாற்றான் அவனைப் பிறண்டும் 'செம்மை புரிவான்' 'செம்மையுடைய மனத்தன்' எனப் பலதரமழைத்தனர். இன்னும் இச் செய்யுளிற் கூறிய குணங்களையே பின்னரும் கூறியிருத்தல் குறிப்பிடத்தக்கது. 'செங்கோலான்' 'பொய்மை விலக்கினன்' 'மெய்ம்மை விடாதான்' என்றிவையெல்லாம் அவர் கூற்றுக்கள். 'அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்' உடையவன் எனச்சண்டுக் கூறிய தற்கொப்பப் பின்னரும் 'அறத்தின் பெருந்தவமே' 'பேரருளின் கண்ணே' யென அவனை அழைத்துளர்.

இனித் தமயந்தியைப் பலபடத்திட்டிக் காட்டியுளரெனினும் அவற்றுள் 'அழகு சமந்தினைத்த' ஆகத்தாள்" என்ற தொடர் விஞ்சிய நயமுடையது. இது சீதையை வர்ணிக்கும் போது கம்பர் கூறிய 'அழகெனும் அதுவுமோர் அழகுபெற்றதே' என்பதை நினைப்பூட்டாமலிராது

"......................வண்டு
பழுகருங்கூந்தற்பாவை — மழகளி
ற்று
விமன்குலத்துக்கோர்மெய்த்திபமற்ற
வளை
காமன் திருவுக்கோர்காப்பு"

"காற்குணமுநாற்படையாவைப்புல
னுநல்லமைச்சா
ஆர்க்குஞ்சிலம்பேஅணிமுரசா—வேற்
படையுப்
வாளுமேகண்ணாவதனமதிக்குடைக்
கீழ்
ஆளுமேபெண்மையரசு"

இவையும் படித்தின்புறதற் குரியன.

தமயந்தியினதும் நளனதும் ஒற்றுமையைப் புலப்படுத்த புலவர் கூறியில் சொற்றொடர்களை ஈண்டுக் கூறுதும். 'வியன் திருமகளாம் (நளனது) நல்லுயிர்' ஒற்றைத் தவிலுமுயிருமீரண்டாக'

'ஒருவருடலிலொருவரொதுங்கி
இருவரெனுங்கோற்றமின்றிப்பொரு
வெங்
கனற்கேயும்வேலானுங்காரிகையும்
சேர்ந்தார்
புனற்கேபுனல்கலந்தாற்போன்று'

தமயந்தி சுயம்வர மண்டபத்திற் புகுந்ததை வய வேந்தர் சித்தப் மருங்கே வர, வண்டின் பந்தக்கீழ், கொண்டணைந்த மாதர் மருங்கின் வெளிவழியே மன்னவர் கண்புக்கு நெருங்கச் செய்ய வாய்ச் சிறையன்னம் செங்கமலப் பொய்கைவாய்ப் போவதே போன்றே போய்ப்புக்காள் என நயம்பட உரைத்திருக்கிறார். தமயந்தி நளனுக்கு மாலை சூட்டும் பொழுது

"மின்னுந்தார்வீமன்றன்மெயம்
மாபிற்செய்மைசே
கன்னியானுகிற்கடிமாலை—
அன்னந்தான்
சொன்னவனைச்சூட்ட அருளொன்றன்
சூழ்கிதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து"

எனப் புகழேந்தியார் அவ்விடத்தும் தமயந்தியின் கற்பை உயர்வுபடுத்தி உரைத்தனர். வில்லிபுத்தூரார் தமது நூலில்

"ஆண்படரிப்பிறந்தபோதே
அன்பினுலெல்லைகோர்ந்த
பூண்டெரிமார்பனின்றிப்பொன்ன
வைபொலியத்தோன்றி
ஈண்டெரிமுன்னர்மன்னரிழிவுற
வேட்டிலாளேல்
மீண்டெரிபுரிவனென்னுமாண்ணலே
விழையுமோன்"

எனத் திரௌபதை நினைத்ததாகவும், கம்பர் தன் காவியத்தில்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## இந்தியப் பெண்களுக்கு மன்னர் பேட்டி

### அவர்கள் ஆடையழகு

லண்டன், ஜூலை 25

இம்மாதம் 21ம் தேதியன்று பக்கிங்ஹாம் அரண்மனைத் தோட்டம் மிகவும் மனோகரமான காட்சியை அளித்தது. அப்பொழுது மன்னர்பிரான் இந்தியப் பெண்களுக்குப் பேட்டியளித்தார். இந்தியப்பெண்கள் ஜரிகை வேலைப்பாடுகள் அமைந்த ஆடைகளையும் ஜோதிமயமாகப் பிரகாசிக்கும் ஆபரணங்களையும் அணிந்து கொண்டு காட்சி கொடுத்தார்கள். லேடி சக்ளத்வாலா, லேடி டக்கன், லேடி துவாதிர், சிர்த்தாளி மோஹன்சிங் முதலியவர்கள் மன்னர்பிரானுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள்.

## கதர்ப்பாட்டு

பல்லவி

கதர்த்துணி வாங்கலையோ அம்மா
கதர்த்துணி வாங்கலையோ ஐயா (கதர்)

சரணங்கள்

1. ஏழைகள் நூற்றது, எளியவர் நெய்தது,
கூழும் இல்லாதவர் குறைபல தீர்ப்பது (கதர்)

2. கன்னியர் நூற்றது, களைத்தவர் நெய்தது
அன்ன தானபலன் அணிபவர்க் களிப்பது (கதர்)

3. கூனர்கள் நெய்தது, குருடர்கள் நூற்றது,
மானமாய்ப் பிழைக்க மார்க்கம் தருவது (கதர்)

4. தாழ்ந்தவர் நூற்றது, தளர்ந்தவர் நெய்தது,
வாழ்ந்திடும் உங்கட்கின்னும் வாழ்த்துகள்சொல்வது
(கதர்)

நாமக்கல் திரு. வெ. இராமலிங்கம்பிள்ளை.

## தானேஇயங்கும் டெலிபோன்

கொழும்பு ஜூலை 27

அடுத்த நிதிவருட முடிவில் கொழும்புக்கு வெளியே 44 தானே இயங்கும் டெலிபோன் எக்சேஞ்சுகள் வேலை செய்துகொண்டிருக்குமென அறியப்படுகிறது. அவை 24 மணிநேரமும் வேலை செய்யும். இதற்கான முழு வேலைகளும் ஏற்கனவே வெளியூர்களில் இப்போதே செய்யப்பட்டு வருகின்றன. பலாங்கொடையில் இவ்வேலை ஆரம்பமாய் விட்டது; கல்கிசையிலும் பொரலஸ்கமுவ ஆகிய இடங்களிலும் சில தினங்களில் வேலை ஆரம்பமாகிவிடும்.

## ஐரோப்பியரின் குருட்டு நம்பிக்கை

வெள்ளைப் பூனையை நள்ளிரவில் கொன்றால் புதையல் கிடைக்குமென்று ஐரோப்பாவின் சில பகுதிகளில் நம்பப்படுகிறது. கழுதைகளை வீட்டில் வளர்த்து வந்தால் அதிர்ஷ்டம் ஏற்படுமென்றும் கறுத்தநாய்களின் உதிரத்தை உபயோகித்தால் நோய் ஏற்படாதென்றும் ஐரோப்பிய மக்களில் ஒரு சாரார் நம்புகின்றார்கள்.

- பொலிஸ் ஜேர்னல்.

## திருக்குர்ஆனும் பகவத்கீதையும்

### தேசியப்போருக்குச் சிறந்த போதனை

[நீர்கொழும்பு திரு. W. S. சார்லிஸ் பெர்னாண்டோ எழுதுவது]

குர் ஆனில் கீதையும், கீதையில் குர் ஆனும் பொதிந்திருக்கின்றதென்ற இக்பால், என்ற ஒருபெரியார் கூறியிருக்கிறார். இக் கூற்றில் மறுக்கமுடியாத உண்மையிருக்கின்றதென்ற சில உதாரணங்களைக் கொண்டு விளக்குவதே எனது கட்டுரையின் நோக்கம்.

பகவத்கீதையானது மனிதவர்க்கத்தோர் கைக்கொண்டொழுகுவதற்காக உலக ரட்சகரால் கொடுக்கப்பட்டதொன்று அன்ன அடிப்படையாகக் கொண்ட இந்துமதத்தைத் தழுவியவர்கள் நம்புகிறார்கள். இதுபோலத் திருக்குர் ஆனும் மனித உடம் பெடுத்தோர் கடைப்பிடித் தொழுகுவதற்காக ஆண்டவனால் அருளப்பட்டதென்று இஸ்லாம் மதத்தினர்களோது கிறார்கள். பாரதப்போர் நடைபெறுவதற்கு முன்னுற் குருக்ஷேத்திரமென்ற போர்க்களத்தில் எதிர்த்து நிற்கும் தனது உற்றார் உறவினரைக் கொன்று குவித்துத் தனக்குக் கிடைக்கக்கூடிய சுகசெல்வங்களையெல்லாமிழப்பது மிகச் சிறந்ததென்று தயங்குகின்ற அருச்சுனனுக்கு மஹாவிஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ. கிருஷ்ணன் கீதையைப்போதித்தருளினார். ஏ அர்ஜுனா மயங்காதே எழுந்துநின்று க்ஷத்தவீரனைப்போல யுத்தஞ் செய்யென்று மாபேசான் உற்சாகத்தைக் கொடுத்தான். ஏ ஜனங்களே! உங்களை எதிர்த்துப் போராடுவோர்க்குப் புறமுதுகுகாட்டி ஓடாதீர்கள். உங்களுடன் பொருதுவோரை எதிர்த்து வெற்றிபெறுங்கள் என்று திருக்குர் ஆன் கூறுகின்றது. ஆனாலும் போர் முறையை முழங்கும் கீதையும் குர் ஆனும், அஹிம்சையை விரதமாகக் கொண்டிருப்போருக்கு வெறுப்பாக இருக்கலாம் என்றாலும் மனிதர் மனிதராக இருக்கும்வரையும் போர் நடந்தே தீருமென்று ஒவ்வொருமதமும் வற்புறுத்திக் கூறுகின்றது. உலகவாழ்க்கையே ஓர் போராகும் விரிந்த இவ்வுலகில் மனித உடம்பெடுத்தோர் ஒவ்வொருவனும் தனது தன கடமையைச் செய்தே தீர வேண்டும். நோனமுறையில் சான்வழியில் தற்காப்பையும் பொது க்ஷேமத்தையும் கருதி மனிதன் கடனாற்றவேண்டும் என்று நமக்குக் குர் ஆனும் கீதையும் இடித்துக் கூறும் போது போர் எவ்வாறு குறுக்கிடாமலிருக்கும். தன் கடமையை முறையுடன் செய்யுமொருவன் தான் இயற்றும் பணிக்கு இடையூறு நேர்ந்தகாலத்து அதனை அகற்றுவதற்காக யுத்தஞ் செய்வது முறையென விளக்குகின்றது. யுத்தமென்ற நிகழ்ச்சி மிக மிகக் கொடியதென்றாலும், அந் நிகழ்ச்சி எந்நோக்கத்தினால் தூண்டப்பட்டு நடக்கின்றதென்று கூர்ந்து கவனிக்கவேண்டும். யுத்தத்தில் இருவகை உண்டு. ஒன்று சுயநல மிகுதியினாலும் சாடுபிடிக்கவேண்டுமென்ற பேராசையினாலும் ராணுவத் திமிரினாலும் செய்யும் யுத்தம். மற்றது மறத்தை அறுத்து அறத்தை நிறுத்துவதற்காகச் செய்யும் யுத்தம் ஏ! மனிதா நீ தர்மயுத்தஞ்செய்ய மற்றதை வீழ்த்தி அறத்தைத் தழைக்கச்செய்வதற்காக, உனது அறிவையும் அறிவின் ஆற்றலையும் மனத்தின் ஊக்கத்தையும் உடலின் பலத்தையும் நீ உபயோகப்படுத்து என்று கீதையும் குர் ஆனும் நமக்கு உபதேசஞ்செய்கின்றன. அர்ஜுனா! இதுபோர்முனையல்ல தருமக்ஷேத்திரம் உன் முன் அணிவகுத்துநிற்போர் உனது உற்றார் உறவினரல்லர். அவர்களுக்கும் உனக்கும் இந்த இடத்தில் எவ்விததொடர்பும் இடையாது; அவர்கள் அதர்மத்தின் சின்னங்களாக இருக்கிறார்கள். வையகம் உய்வதற்கும் தர்மந்தழைப்பதற்கும் அவர்களை வெட்டி வீழ்த்தவேண்டியது உனது கடமையென்று கிருஷ்ணன் குருக்ஷேத்திரமென்ற போர்க்களத்தில் அர்ச்சுனனுக்குப் போதித்தார் அதுபோல ஆண்டவனின் சிறப்பைக் காப்பாற்றுவதற்காகவும் தர்மம் உலகில் வேரூன்றுவதற்காகவும் மனிதா! நீ போர் செய்யென்று திருக்குர் ஆன் இனறைக்குப் பறைசாற்றுகின்றது.

(தொடரும்)

## றெயில்வே நிபுணர்கள்

### அடுத்தமாதம் வருவார்கள்

கொழும்பு ஜூலை 27

றெயில்வே விசாரணை நிபுணர்கள் இருவர் அடுத்தமாத இறுதியிலாவது, செப்டம்பரிலாவது கொழும்பு வந்து சேர்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது மேற்படி இரு நிபுணர்களும் றெயில்வேக் கமிஷனில் பிரதான ஸ்தானங்களை வகிப்பார்கள். அவர்கள் இங்கு ஆறுமாத காலம் தாமதிப்பார். றெயில் போக்குவரத்துடன் விமானப் போக்குவரத்து சம்பந்தமாகவும் அவர்கள் விசாரணை செய்வார்கள்.

## பாலர் பகுதி

# நமது நாடு

அருமை மருமக்காள்!

உங்களிற் சிலர் "நமது நாடு" என்னும் விஷயமாக எழுதியிருந்தீர்கள். அவ்விஷயமாக எழுதி அனுப்பிய ஒவ்வொரு மருமக்களுக்கும் நான் நன்றி கூறுகின்றேன். இவர்களிற் சிலர் இம்முறை பரிசு பெறுவிடினும், அடுத்த அடுத்த முறைகளிற் கட்டாயமாகப் பரிசு பெறுவார்கள். பரிசு கிடைக்கவில்லையே என்று அவர்கள் மனஞ்சோர்வடையக்கூடாது. அடுத்த அடுத்த முறைகளிற் பரிசு அளிக்கும்போது, அவர்கள் எத்தனைமுறை பரிசுக்காக எழுதினுர்கள் என்பதும் அவதானிக்கப்படும். ஆதலால், எத்தனைமுறை ஒரு மருகர் கட்டுரைகளை எழுதி அனுப்புகிருரோ அவ்வளவுக்கு அவருக்கு நல்லது. தேர்ச்சியும் உண்டாகின்றது. இம்முறை, வட்டுக்கோட்டை, திருஞானசம்பந்த வித்தியாசாலையைச் சேர்ந்த ஆ. க சச்சிதானந்தம் என்னும் மருகரது கட்டுரையே பரிசு பெறுதற்குரிய கட்டுரையாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. அவர் இன்னும் அதில் ஊக்கமெடுத்துக் கொள்வாராக.

அவர் எழுதிய கட்டுரை கீழே தரப்படுகின்றது. அவருக்குரிய பரிசுப்புத்தகம் அடுத்தவாரத்திற்கிடையில் தபால் மூலம் அனுப்பப்படும்.

## இம்முறைபரிசுபெற்ற பாலர் கட்டுரை

திருஞானசம்பந்த வித்தியாசாலை,
வட்டுக்கோட்டை,
25-7-36.

எனது அன்பும் பட்சமும் மறவாத "சுப்புமாமா" அவர்களுக்கு எழுதும் விண்ணப்பம் யாதெனில், நீங்கள், "நமது நாடு" என்று சொல்லப்படும் யாழ்ப்பாணத்தைப் பற்றி ஓர் சிறுகட்டுரை எழுதச் சொன்னீர்கள். ஆதலால் என் மனத்துள் அடங்கியவற்றை 1. முகவுரை, 2. இந்நாட்டுக்கு யாழ்ப்பாணம் என்னும் பெயர் வந்ததன் காரணம் 3. நம் யாழ்ப்பாணம் தற்போது அடைந்திருக்கும் சீர்கேடான நிலை, 4. இனி நாம் நம் நாட்டை மேலோங்கச் செய்யுமுறைகள், 5. முடிவுரை என்ற குறிப்பைக் கொண்டு ஓர் சிறுகட்டுரை எழுதுகின்றேன். ஆனல் இதில் எளியேனுகிய யான் விடும் பிழைகளை மன்னித்து நல்லவற்றை எடுத்தும் அல்லாதனவற்றைக் கழித்தும் விடவும்.

### "நமது நாடு"

முகவுரை.

நமது நாடாகிய யாழ்ப்பாணம் தற்போது மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றது. பிறநாடுகளெல்லாம் நல்ல உன்னத நிலையை அடைந்திருக்கின்றன. இனி நாமும் நமதுநாடு உன்னத நிலையை அடையுமாறு முயற்சிப்போமாக.

நம் நாட்டுக்கு யாழ்ப்பாணம் எனும் பெயர் வந்ததன் காரணம்

முற்காலத்திலே இந்தியாவிலே அந்தகக்கவி வீரராகவ முதலியார் இருந்தார். அவர் ஒருநாள் தன் மனைவியுடன் கோபித்துக்கொண்டு வெளிக்கிட்டுவந்து இலங்கையை ஆண்ட பாலசிங்க மகாராசாவிடம் வந்து ஓர் இனிமையான பாட்டை யாழில்இசைத்துப்பாடினுர். அரசர் குருடரைப் பார்க்கக் கூடாதென்று திரையில் இருந்தவண்ணம் வெளியே வந்தான். வந்து உனக்கு என்ன வேண்டுமென வினவினுன். அப்பொழுது ராகவர் அரசனைப் பார்த்து, மகாராசாவே! என் மனைவி நான் புறப்பட்டு வரும்பொழுது வளநாடும் யானையும் வாங்கிவரப்போகின் றீரோ வென்று பரிகாசம் செய்தாள் என்று கூறினுர். உடனே அரசன் நம் நாட்டையும் ஓர் யானையையும் பரிசனத்தையும் பரிசாக அவருக்கு உதவினுர். அப்பொழுது அவர் அதனைப் பெற்றும் இவ்விடம் அடைந்து தான் யாழினுற் பரிசு பெற்றமையினுல் இதற்கு யாழ்ப்பாணம் எனப் பெயர் இட்டுக்கொண்டு வந்த பரிசனத்தை இவ்விடத்தில் குடியேற்றி வைத்தார். ஆதலால், நாம இவ் யாழ்ப்பாணத்தில் இருக்கும் சீர்திருத்த நிலைமையைச் சொல்லவும் வேண்டுமோ?

### நம் யாழ்ப்பாணம் தற்போது அடைந்திருக்கும் சீர்கேடான நிலை

நாம் முன் சொன்னபடி நடக்க வேண்டிய நிலைமையில் நின்றும் வழுவிவிட்டோம். அதற்குக் காரணங்கள்:

a. ஒற்றுமையின்மை: நமதுநாடு இவ்வளவு சீர்கேடான நிலையை அடையவேண்டியதன் முதற் காரணம் ஒற்றுமையின்மையே.

"ஒற்றுமையில்லாக்குடி ஒருமிக்கக் கெடும்" என்ற ஆன்ருேர் வாக்குக் கிணங்கவே நடக்கிருேம். ஏனெனில், ஒவ்வொருநாளும் எங்கே பார்த்தாலும் அடிபிடிசண்டை கத்திக்குத்து என்பனவே எப்பொழுதும் நடைபெறுகின்றன. உதாரணமாக, ஒரு குடும்பத்திலே அக் குடும்பத்தின் தலைவன் ஒருமுறையாக நடக்கிருன். தலைவி ஒருமுறையாக நடக்கிருள். அவர்களது பிள்ளைகள் ஒருமுறையாக நடக்கின்றனர். அப்பொழுது அக்குடும்பத்தில் எப்படி ஒற்றுமை வருவது. அப்படியே நம நாட்டில் உள்ளவர்களும சீர்கேடான நிலையில் இருப்பார்கள் என்பதை எளிதில் விளங்கலாம்.

b. கடவுட்பக்தி: கோவில்களில் எல்லாம் நம் சமயக் கொள்கைக்கு மாருக ஆடுகோழிகள் பலியிடுகின்றனர். அப்படித் திருவாலயங்களின் முன்னிலையில் நடத்தினுல், கடவுள் நமக்கு அருள்புரிவதெப்படி? அன்றியும், நமக்குக் கடவுள் அளவில்லாத அருள் தந்துவிட்டார் என்பதுபற்றிக் கடவுளைப் பழித்து ஆவேசங் கொள்ளுகிருர்கள். இது நீதியா? இப்படிக் கடவுளைப் பரிகாசம் செய்தால் நாம் சுகத்துடன் வாழ்வதெப்படி? உயிர்ப் பலியிடுகின்றவர்களும் திருமுன்னிலையில் மனமுவந்து அவ்வுயிரைக் கொல்லும் ஆயுதத்தை எடுத்துக் கொலை செய்கிருர்களே! அதனை நினைக்க நமக்கு மனம் நடுங்குகின்றதே. அதனை நேரிற் கண்டால் எவ்வளவு துக்கம் வருமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? உயிர்ப்பலியிடும் அன்று அவ்விடம் சென்ருல் அவ்விடத்தில் நிற்பவரில் சிறிதேனும் பிரகாசம இல்லை எனபதைக் காணலாம். இன்னும் தாசிகளை வருவித்து நடனம் செய்விக்கிருர்கள். இதுதானு நம நாட்டுக் கடவுள் வணக்கம்? கடவுளை வணங்கப்போகில் முழு அன்போடுபோய்க் கும்பிடல்வேண்டும். இன்றேல், கும்பிடச் செல்லல் ஆகாது. வேடிக்கை பார்க்க விரும்பக்கூடாது. நம் நாட்டிலே கடவுட்பக்தியும் ஒழுக்கமும் சர்வ சீவர்களிடத்து அன்பும் பொறுமையும் உள்ள ஒருவர் இருப்பாராகில் நம் நாட்டிற்கு ஏதும் குறை உண்டாகாதென்பதை உணர்த்துவதற்கு

"நெல்லுக் கிறைத்த நீர்வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம— தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

என்ருர் நமது ஔவைப் பிராட்டியார்.

c. மணவீடு பிணவீடு: மணவீட்டிலும் பிணவீட்டிலும் எவ்வளவோ பணத்தை இறைக்கிருர்கள். இப்படி இறைப்பது வீண் செலவேயாகும் அவற்றிலும் பார்க்க ஏழைகளுக்கு அப் பணத்தைக் கொடுப்பது எவ்வளவு புண்ணியமாகும். நம் நாட்டில் உள்ளவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள். ஏனெனில், ஆணவம் அவர்களை விடாது.

d. நாகரிகம். நம் நாட்டிலே உள்ளவர்கள் நாகரிகத்தினுல் தம்மை மறந்துவிடுகிருர்கள். தற்போதைய வாலிபர்களைப் பார்த்தால் எந்த நேரத்திலாவது சீப்புக் கண்ணுடி சிகரெட் பிடி என்பவற்றை மடியில் வைத்துக் கொள்ளுகிருர்கள். நாகரிகத்தினுல் கமச்செய்கை கின்றது. அதனுற் பிறநாடுகளிலிருந்து பொருள்கள் இறக்குமதி யாகின்றன. நம்நாட்டிற் சிங்கள அரசர் காலத்தில் எவ்வளவு நெல் விருத்தியானது. மற்றும் எத்தானியமும் விருத்தியானது. அப்பொழுது இங்கிருந்து பிற இடங்களுக்குத் தானியவகை ஏற்றுமதியானது. தற்போது பிற இடத்திலிருந்து நமக்கு எவ்வளவு தானியவகை இறக்குமதியாகின்றது. தற்போது காடாயிருக்கும் வன்னிப்பகுதி முன் கமச்செய்கை நிலமாகவிருக்க வில்லையா? அப்படி இருந்தனவே தற்போது காட்டு நிலையை அடைந்தன. ஆதலால் நாம் தெண்டித்து முன்னேற்றம் அடையவேண்டும்.

### இனி நாம் நம்நாட்டை முன்னேறச் செய்யும் முறைகள்.

நாம் ஒற்றுமையாகவும் கடவுட் பக்தியாகவும் ஆடுகோழிகளை ஆலயங்களின் முன்னிலையிலே பலியிடாமலும் தாசிகள் நடனம் செய்விக்காமலும் மதுபானம் செய்யாமலும் மணவீடு பிணவீட்டில் வீண் செலவு செய்யாமலும் புண்ணியத்தைச்செய்தும் நவநாகரிக வாழ்க்கையை அறவே ஒழித்தும் கைத்தொழில் கமத்தொழிலை விருத்திபண்ணியும் தீச்செய்கையை ஒழித்தும் நற்செய்கையைச் செய்துவருவோமாகில் நம் நாடு முன்னேற்றம் அடையும் என்பது திண்ணம்.

ஆதலால் நாம் மேற்கூறியமொழிகளை மேற்கொண்டு நம் நாட்டை நல்ல உன்னத நிலையை அடையும்படிசெய்ய முயற்சிப்போமாக.

இங்ஙனம்,
தங்கள் மருகன்
ஆ. க. சச்சிதானந்தம்.

—

## அடுத்தமுறைக் கட்டுரை

அடுத்த திங்கட்கிழமைக்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக மருகர்கள் "ஒரு வசவப்பெரியார்" என்னும் விஷயத்தைப்பற்றி மிக அழகான கட்டுரைகள் எழுதி அனுப்புவார்களாக.

அவ்விஷயத்தில் முதலாவது கட்டுரையாக எழுதுவோருக்கு இதுவரைகொடுத்த பரிசுப்புத்தகங்களிலும் பார்க்கச் சிறந்தபுத்தகம் ஒன்று பரிசாக வழங்கப்படும். எனது மருமக்கள் அனைவரும் இதில் ஊக்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பம். பரிசு கொடுக்கும் போது, எழுதும் மருகரின் வயது, வகுப்பு முதலியவையும் அவதானிக்கப்படும். ஆதலால், வயதாற் குறைந்த மருகரும் தமக்குப் பரிசு கிடைக்காதென்ற பயமில்லாமல் எழுதலாம்.

இங்ஙனம்
உங்கள் அன்புள்ள
சுப்புமாமா

# யாழ்ப்பாணத்திற் சம்ஸ்கிருதம்

## சைவர்கள் சம்ஸ்கிருதக் கல்வியை ஓம்புதல் அத்தியாவசியகமாம்

(வண்ணை வை. ஆ. சர்மா எழுதியது)

(முற்றொடர்)

ஐயா! இக்காலம் சம்ஸ்கிருத பாஷையைக் கற்று ஓரளவுக்காவது தேர்ச்சி பெற்றவுடன் எந்த ஸ்தலத்தில் உத்தியோகங் கொடிப்பார்கள்? எத்துறையில் ஈடுபட்டு வியாபாரஞ் செய்யலாம்? எந்தக் கைத்தொழிலை மேற்கொள்ளலாம்? எத்தகைய விவசாயம் கைக்கொள்ளப் படலாம்? இவையெல்லாம் பொருள் வரும் வாயில்களன்ருே! என்பதே. இவ்வாசங்கைக்கு உத்தரம் வருமாறு: அந்தணச் சிறுவர் சம்ஸ்கிருத பாஷையை நன்கு கற்றுக் கொள்ளுவரேல் தமக்குரிய வேதாகமங்களையும் மற்றும் சாஸ்திரங்களையும் ஐயந்திரிபற உணர்ந்து கொள்ளுவர்; அவ்வாறே பிறருக்கும் உணர்த்துவர். கிரியா பாகங்களை நன்குற அறிந்து திருத்தமாகச் செய்வர்; செய்விப்பர். விருப்போடாவது வெறுப்போடாவது பிறர் கொடுப்பதை ஏற்பதே தமக்கு இன்றியமையாத தொழில் என்ற குறுகிய மனப்பான்மையைக் கொண்டு தம் பெருமையைத் தாமாகவே இழந்து திரியும் இக்காலத்துள்ள சிலரைப் போலலாமல், கற்பவை கற்றுக் கற்றுங் கொழுகுபவராய் அந்தணராய தாமும் அறவழியர்னிட்டிய பொருளை,

'வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து'

என்ருங்கு வறியவராய் ஏற்ருருக்குக் கொடுக்கவும் பயின்று கொள்ளுவர்.

'அந்தணரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்'

என்ற தேவர் திருவாக்குப்படி பிறரது துன்பங் கண்ட விடத்து, அவர் தம் இன்னல்கெட — மந்திரத்தினுல் தெய்வத்தையும் வசப்படுத்தும் உரிமை பூண்டவராதலின் அறிவின் முதிர்ச்சியாலமைந்த அனுஷ்டான ஒழுக்கங்களால் தெய்வத்தை வேண்டி நிற்பர். அதனுற் பயனடைவோர் விரும்பிக் கொடுப்பதை உவந்து ஏற்பதும் அந்தணர்க் குரியதேயாம். எனவே அந்தணர்க்குரியவையான ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு தொழில்களும் செவ்வனே நிகழுதற்குச் சம்ஸ்கிருதம் இன்றியமையாததாகின்றது. இதிலும் ஒரு சிலர் வினுவொன்று கடாவுவர். என்னையெனின்? 'பரார்த்தமான கிரியாபாகங்களை நடாத்தும் அந்தணருக்குச் சம்ஸ்கிருதம் ஆவசியகமானதே. ஆன்மார்த்தமானவற்றைப் புரோகிதர் மூலமாகச் செய்து கொண்டும், செய்வித்துக் கொண்டும், ஓர்ரவழிச் செய்யாதும் அந்நிய பாஷை பயிற்றல், அர்சாங்கக் கடமை பார்த்தல், வியாபாரஞ் செய்தல், கைத் தொழில்புரிதல், கமத்தொழில் பார்தல் முதலியவற்றைக் கைக் கொள்ளும் இக்காலத்து அந்தணருக்கும் சம்ஸ்கிருதம் ஆவசியகமானதோ?' என்பதே. ஆ! — குறித்த தொழில்களை அவர்கள் செய்யலாமோ? அன்ருே! என்ற பிரச்சினையில் நாம் இறங்கவில்லை. அது மற்றென்று விரித்தலாகும் — அவர்கள் தம்மை அந்தணர்களென்று கொள்ளினும் கொள்ளாத் தொழிலினும், எத்தொழிலைத்தான் செய்து வந்தாலும், கடவுள் ஒருவர் மேலானவராய் இருக்கிருரென நம்புகிறவர்களானுல், முழுமுதற் கடவுள் சிவபெருமான் என்பதை ஒப்புக்கொள்ளுகிறவர்களானுல், புண்ணியபாவம் மோக்ஷநரகம் என்பவற்றில் நம்பிக்கை உள்ளவர்களானுல் தம் நித்திய கர்மானுஷ்டானத்திற்காகவாவது சம்ஸ்கிருத பாஷையை ஆதரிக்க வேண்டியவரேயாவர்.

இனிவேளாண்சிறுவர் சம்ஸ்கிருத பாஷையை நன்கு கற்பரேல் வேதமொழிந்த ஏனையவற்றையெல்லாம் நன்ருக ஓதியுணர்ந்து கொள்ளுவர். அதனுல்,

"தங்கவின்ன தகாதன வின்னவென்
றெங்க வுணல ராயி னுயர்ந்தள
மக்களும் விலங்கே" என்ருங்கு நாம செயற்பாலது இன்னது செய்பத் தகாதது இன்னது என்ற உணர்ச்சி வாய்க்கப் பெற்றவர்களாய், தமது குலப் பெயராலேயே பெருமை பாராட்டப் பெற்றதாகிய வேளாண்மையை — பரோபகாரத்தை, பிறர்க்குதவியை உத்தமமான முறையிற் செய்து வருவர். ஒரு வேலையின் நுட்பமறியாதாெருவன் குறித்த வேலையைப் பிறரைக் கொண்டு செய்வித்தல் சிறப்பாக முடிவுபெறுது அது போலவே வேளாளரும் தம பொருட்டாகவேனும பிறர் பொருட்டாக வேனும் தெய்விக கிரியாம்சங்களைச் செய்விக்குங்கால் அதில் அவருக்கும் உண்மையான அறிவு ஓரளவுக்காவது இருந்தால் அன்றிச் சிரத்தையிராது தகுந்த அறிவு படைத்த குருவை ஆசாரியரைத் தெரிந்து கொள்ள மாட்டார். அதனுல் 'எண்ணெய்ச் செலவே யன்றிப் பிள்ளை வளர்ச்சியில்லை' என்றுற் போல வீண் சிரமமும் பொருட் செலவும் நேருவதோடு மாத்திரம் அமையாமல், 'குளிக்கப் போய்ச் சேற்றையும் பூசிக் கொண்டவருமாவர்' நிரக்ஷர குக்ஷிகளாய்ப் பெயரளவில் குருவென்று திரியும் சில பார்ப்பனரை இக்காலத்துள்ள சில கோவிலதிகாரிகள் குருவென்று கொண்டு பழிக்கஞ்சாது பஞ்சமாபாதகங்களையும் திருக் கோவில்களில் நிகழ இடந்தந்து, தமக்கும் தம்மைச் சார்ந்தோருக்கும், அன்போடு வழிபடும் அடியார்களுக்கும் அந்தோ! தீராப்பழியையும் பாவத்தையும் தேடிக் கொள்ளுகிருர்களே! இவர்கள் உண்மையான அறிவு படைத்தவர்களானுல், அறிவுக்கேற்ற ஒழுக்கம் உள்ளவர்களானுல் 'கோவிலதிகாரிகள்' என்ற பெயரளவில் தம்மைப் பெரியவர்களாக மதித்து இறுமாப்புக் கொள்ளாமல தம்முடைய ஆன்மாவுக்கு நிலையான ஒரு வீட்டை — ஆலயத்தைத் தேடிக் கொண்டவர்களாக நினைந்து உண்மையான பக்தியோடு எங்குப்பிழை நேர்ந்து விடுமோ வென்ற அச்சமுள்ளவராய்த் தொண்டாற்றி வருவர்

இன்னும் வேளாண் சிறுவர் சிற்பம், சோதிடம், வைத்தியம முதலிய வற்றில் வன்மை பெறுவதற்கும் சம்ஸ்கிருதம் பெரிதும் உதவுகின்றது. சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தமாகும். பிதாக்களின் திருப்தியே சந்ததி விருத்திக்கு ஏதுவென்று சாஸ்திரங்கள் சாற்றுகின்றன. நன்பொருளறியாவிடத்து நம்பிக்கை குறையும். ஆகவே நன்பொருளறிந்துசிரத்தையோடு சிராத்தஞ் செய்து சந்ததி விருத்தியடைந்து மகிழுவதற்கும சம்ஸ்கிருதம் வேண்டப்படுகின்றது.

இவ்வாறு அவசியம் வேண்டப்படும் சமஸ்கிருத பாஷையை நமது யாழ்ப்பாணநாட்டில் பண்டு போலப் பரப்புவதற்கு என்ன என்ன உபாயங்கள் கைக்கொள்ளப் படலாம் என்பது ஆராயப்பட வேண்டியதே. முதலாவதாக, தெய்வமுண்டென்று நம்பு மொவ்வொருவரும் தினந்தோறும் ஆலய தரிசனத்தை விரும்ப வேண்டும். விருப்பி ஒன்றைச் செய்தாலன்றி அது க்ஷேமமாக நேராது. ஏனைய பல சமயத்தவர்கள் தம்மவர்களைப் பலவந்தப்படுத்தி ஆலய தரிசனஞ் செய்விக்கின்றனர். அது உண்மையான வழிபாடாகாது. ஆலய தரிசனம் க்ரமப்படவே அங்கு நடைபெறுவனவற்றிலும் தன்னைப் பற்றியும் விசாரமுண்டாகும். விசாரமுண்டாகவே பலர் ஒன்று கூடும் இடத்துப் பேச்சு நிகழும். வேண்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# காங்கேசன் துறைக் கத்திக்குத்து வழக்கு

## காயக்காரன் கூறிய சாட்சியம்

## எதிரிக்கு 3 வருஷம்

[நமது நிருபர்]

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் 14வது வழக்காக மல்லாகப் டின்திறிக்கைச்சேர்ந்த காங்கேசன் துறை என்னுமிடத்தில் கடைவைத்திருக்கும் அண்ணாமலை-நடராசா என்பவரை அவ்வூர் வயிரமுத்து-சுப்பிரமணியமென்பவர் ஓர் கத்தியால் குத்திக் கொலைசெய்ய எத்தனித்ததாகக் குற்றஞ்சாட்டித்தொடரப்பட்டவழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக திரு A. H R. வீரசூரியாவும் எதிரிசார்பாக திரு. குமாரசூரியரின் அனுசரணையைக்கொண்டும் திரு பொன்னம்பலத்தின் அனுசரணையைக்கொண்டும் நியாயவாதி திரு. தம்புதுரைசாமியும் வாதித்தனர்.

ஜூரித்தலைவராக திரு. A. சரவணமுத்து தெரிந்தெடுக்கப்பட்டார்.

கன்னங்கிறல்லகேசாமுவேல் அப்பு கூறிய சாக்ஷியமாவது:—

எதிரியின் கடைக்குக் கிட்ட எனக்கு ஓர் றொட்டிக்கடை உண்டு எதிரி ஓர் தேநீர்க்கடை வைத்திருக்கிறான். காயக்காரன் நடராசாவும் எங்கள் கடைக்குக்கிட்ட ஓர் கடை வைத்திருக்கிறார். எனக்கு உதவிக்காக ஜோண்பெரேரு என்னுடன் இருந்தான்

சென்ற சித்திரை மீ 20ம் திகதி இரவு 9-30 மணியளவில் நான் எனது கடையை மூடிவிட்டு உள்ளே இருந்தபோது ஐந்து தமிழர் வந்து தேத்தண்ணீர் கேட்டார்கள். நான் "கடையை மூடி விட்டேன். தேத்தண்ணீர் தர முடியாதென்றேன்" அவர்கள் "நாங்கள் தூரமான இடத்திலிருந்து இங்கு ஓர் வருத்தக்காரனைப் பார்க்க வந்தோம் பசி அதிகமாய் இருக்கிறது. கட்டாயம் தேத்தண்ணீர் தரத்தான்வேண்டுமென்று கேட்டனர். நாங்கள் தேத்தண்ணீருக்கு ஆயத்தஞ் செய்தோம். இதற்கிடையில் எதிரி அவ்விடம் வந்து யாரடா உவ்விடத்தில் நிற்கிறது என்று கேட்டார். அவர்கள் "நாங்கள் தேத்தண்ணீர்குடிக்கநிற்கிறோம் என்றார்கள். எதிரி உது என்னடா கையில் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டான். 'ஏன் இவற்றை இங்கே கொண்டுவருகிறீர்கள்'என்று சொல்லிவிட்டுப்போய் ஓலையைப் பறித்து அவர்களுக்கு அடிக்க எத்தனித்தார். அவர்கள் தேத்தண்ணீர் குடிக்க வந்த எங்கட்கு ஏன் அடிக்கவருகிறாய் என்றார்கள். இச்சத்தத்தைக் கேட்டு நான் கடைக்கு வெளியே வந்து ஏன் என் கடைக்குத் தேத்தண்ணீர் குடிக்கவந்தவர்களை ஏசி அடிக்கப்பார்க்கிறாய் என்று சொல்லிவிட்டு எதிரியைப்பிடித்துத் தள்ளிவிட்டேன். நடராசா இதற்கிடையில் அங்குவந்து எதிரியைப் பார்த்து "நீ குடித்தால் வீட்டிற் போய்ப் பேசாமற் படு" என்று சொல்லிவிட்டு எதிரியைக் கூட்டிக்கொண்டுபோய் வீட்டில்விட்டு விட்டுத்திரும்பிவந்துபள்ளருடன் கதைத்துக்கொண்டு நின்றார். எதிரி திரும்பிவந்து தூஷணமாக நடராசாவை ஏசி நீயும் கள்வருக்காக வா நியாயம் பேசுகிறாய் என்று சொல்லிக்கொண்டு வந்தார். நான் நடராசாவைப் போகச்சொன்னேன். நடராசா வீட்டுப்பக்கமாகச் சென்று கடைக்கதவைத் திறக்கும்போது எதிரி அவர்பின் சென்றார். எதிரியின் காலடிச்சத்தம் கேட்டு, நடராசா திரும்பிப் பார்த்தார். அப்போது கையை ஓங்கிக் குத்தினார் நான் ஆயுதத்தைக் காணவில்லை.

என்னுடன் வேலைசெய்யும் பெரேரா எதிரியைப்பிடித்தார். நான்காயக்காரனுடைய காயத்தை ஓர் துவாயால் கட்டி அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனேன். எனக்குத் தமிழ்நல்லாய் விளங்கும்,

காயக்காரனாகிய அண்ணாமலை நடராசா கூறியதாவது:—

எதிரியாகிய வயிரமுத்து-சுப்பிரமணியம் இச்சம்பவத்தன்று இரவு பத்துமணியளவில் காங்கேசன்துறையில் தேநீர்க்கடை வைத்திருக்கும் சாமுவேல் அப்புவின்கடையில் தேத்தண்ணீர் குடிக்கவந்த பள்ளருக்கு ஓலையால் அடித்தார். பின் எனக்குக் கத்தியாற் குத்தினார். பள்ளருக்கு அடிவிழுந்தபோது நான் எனது கடையில் படுத்திருந்தேன். இவர்கள் போட்ட சத்தத்தைக்கேட்டு வெளியே வந்தேன் வெளியே வந்து "ஏன் தேத்தண்ணீர்குடிக்கவந்தவர்களுக்கு அடிக்கிறாய்" என்றுகேட்டேன் அவர் "நீயார் இதைப்பற்றிக்கேட்பதற்கு" என்று சொல்லிவிட்டு எனக்கு அடிக்கவந்தார். நான் எதிரியைப் பலவந்தமாகப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் வீட்டில்விட்டேன். அந்த நேரத்தில் எதிரி குடித்திருந்தார். இப்படி எதிரியை வீட்டிற் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்து அங்கு நின்ற பள்ளருடன் அவர்கள் ஏன் அங்குவந்தார்களென்றும் அவர்கள் யார் என்றும் கேட்டறிந்துகொண்டு நிற்கையில் எதிரி அவ்விடம்வந்து ஏசினார். நான் என் வீட்டுக்குச் சென்றேன். நான் என் கடைக் கதவைத் திறக்கும்போது எதிரி வந்து ஓர் கத்தியாற் குத்தினார். என்னைச் சாமுவேல் அப்பு பிடித்தார். எனக்கு அறிவு மயங்கிவிட்டது. எதிரி சுப்பிரமணியம் குத்தும்போது அவரைவிட வேறுயாரும் அங்கு நிற்கவில்லை.

குணசேகரா என்னுடன் 8 மாசமாக நின்றான். அவன் இப்போது சாவகச்சேரியில்இருக்கிறான் அவன்தான் என்னை ஆஸ்பத்திரியிற் பார்த்தான்.

இதன்பிற்பாடு, முருகர் ஆறுமுகம் அவ்வூர் விதானையார்சாக்ஷியம்கூறிய பின் எதிரிபக்கத்து நியாயதுரந்தரர் எதிரி தான கடுங்காயம் உண்டாக்கியதற்குக் குற்றவாளியென ஒப்புக்கொள்வதாகச் சொன்னார். நீதியாசர் மறுநாள் வழக்கை வாசித்துப் பார்த்துத் தீர்ப்புக் கூறுவதாகக் கூறினார். மறுநாள் எதிரிக்கு 3 வருஷ மறியல் தீர்க்கப்பட்டது.

---

### கவலையீனமான சாரத்தியத்திற்கு 9மாதம்.

புத்தூர் றேட்டில் காசிப்பிள்ளை—செல்லையா என்பவர் தனது காரை விரைவாகவும் கவலையீனமாகவும் ஓட்டியதால் வைரமுத்து என்பவருடைய மாணத்தை விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டிய வழக்கு விசாரணைக்குச் சுப்பிறீம் கோட்டில் எடுக்கப்பட்டது. விசாரணையின்பின் எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு நீதியாசர் 9மாதக் கடுங்காவல்த் தண்டனை விதித்தார்.

---

### கிழவியர் நடனம்

சில மாதங்களுக்குமுன் லண்டன் ஆல்பர்ட்காலில் வயது சென்ற பெண்களும் ஓளவைக்கிழவிகளுமாக 250 பேர் ஒன்று சேர்ந்து ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தனராம். அவர்கள் அவ்விதம் செய்வதால் தேகம் வலுவடைந்து அழகும் அதிகரிக்குமாம். சென்ற வருடத்தில் 16 அங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட இச் சங்கத்தில் இப்பொழுது 1300 பேர்கள் இருக்கின்றனராம். இதை ஸ்தாபித்தவர் 60 வயது சென்ற அழகிய ஸ்ரீமதி பகட்ஸ்டாக் என்பவர் இவர் பார்வைக்கு இளம் வயதினராகக் காணப்படுகின்றாராம் இச் சங்கத்திற்கு லண்டன் முழுவதும் கிளை ஸ்தாபனங்கள் இருக்கின்றன.

### வைதும் குத்தியும் வருத்தியதாக வழக்கு.

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் வசிக்கும் சுப்பிரமணியம் கைம்பெண் தங்கம்மா, (1) தியாகு (2)நவரத்தினம் (3) முத்துக்குமாரு (4 நடராசா (5) மரியமுத்து: ஆகியவர்கள் நீதியீனமாக ஏசியும், தியாகு என்பவர் கையில் ஓர் கத்தியாற் குத்தியும் காயப்படுத்தியதாக வழக்காளி ஆகிய மேற்படி தங்கம்மாவால குற்றஞ்சாட்டி ஓர் வழக்குத் தொடரப்பட்டது.

சுப்பிரமணியம் கைம்பெண் தங்கம்மா கூறியதாவது:—

சென்ற 34௳ பிற்பகல் மூன்று மணியளவில் மேற் கூறியவர்கள் வந்து நீதியீனமாகப் பேசினார்கள் இவர்களில (1) தியாகுவும், (2) நவரத்தினமும் படலைக்கு மேலால் ஏறி, எனது வளவுக்குள் வந்து, "நீ, அந்த வழக்கைவிடமாட்டாயா" வென்றுகேட்டார்கள். நான் அதற்கு "நான், என்னசெய்யமுடியும் நீதிப்படி நான் அப்படிச்செய்யவேண்டும்" என்றேன். தியாகு உடனே ஓர் கத்தியால் எனது கையிற் குத்தினார் இரத்தம் வரத்தொடங்கிற்று. நவரத்தினம் அந்த இரத்தத்தைத் துடைத்துவிட்டு. "இதை யாருக்கும்சொல்லவேண்டாம் நானே இதற்குச் சிகிச்சை செய்விக்கிறேன" என்றார்.

எதிரியில் ஒருவராகிய நவரத்தினம் கோட்டிறகு வந்தார். நீதிபதி இவர்மீது குற்றஞ்சாட்டுவதற்குப் போதிய சாட்சியம இல்லாமையால் இவரை விடுதலை செய்தார்.

மற்றையவர்கட்கு 17—8—36க்கு வாறண்ட் விடப்பட்டிருக்கிறது.

---

### நயினாதீவிற் கோரோசனைத் திருட்டு

நயினாதீவில் திருவிழா வியாபாரத்துக்குக் கடைவைத்திருந்த முகமது யூசுப் என்பவரிடம் ஒரு சிறிய போத்தற் கோரோசனையும் ஒரு சிறிய போத்தற் புனுகும் வேறு சில சாமான்களும் களவாடப்பட்டதாகப் பொலிசாருக்கும் அவ்வூர் விதானைக்கும் அறிவிக்கப்பட்டது. யூசுப் தனது கோரோசனையை யாழ்ப்பாணம் பெரியகடையிற் கடைவைத்திருப்பவரிடம் இருப்பதாக அறிந்து அங்கு பொலிசாருடன் சென்று கோரோசனையைக் கண்டெடுத்தார் பொலிசார் விசாரணையின்பின் நல்லூரில் வசிக்கும் சின்னக்குட்டியர்—கந்தசாமி யென்பவர் மீது குற்றஞ்சாட்டி 27-7-37 திங்கட்கிழமை வழக்குத் தொடரப்பட்டது.

முகமது யூசுப் கூறியதாவது:— சென்ற 4-ந் திகதி நயினாதீவிலுள்ள எனது கடையில் சில்லத்தண்டார் கட்டி ஓர் பெட்டியில் வைத்த 50 ரூபா பெறுமதியான கோரோசனையையும தாராசையும, சேவிங்வங்கிப் புத்தகம் ஒன்றையும் கொஞ்சப்புனுகையும் காணவில்லை. அதை நான் அவ்வூர விதானைக்கும் இங்கே பொலிசுக்கும் அறிவித்தேன். என்னிடம் காணாமற்போன கோரோசனை பெரியகடையில் ஓர்கடைக்காரன் வைத்திருப்பதாக அறிந்து பொலிசாருடன் அங்கு சென்றேன் கோரோசனை இருக்கக்காணப்பட்டது.

கடைக்காரன் இவ்வெதிரிதான் தனக்குவிற்றதாகக் கூறினார். நீதிபதி எதிரியை 100 ரூபா பிணையில் விட்டு விசாரணையை 29ம் திகதிக்குத் தவணையிட்டார்.

---

### 7 பிள்ளைகள்.

போர்த்துகோ தேசத்தில் ஒரு ரயில்வேஉத்தியோகஸ்தரின் 27 வயதுடைய மனைவி ஏழு பெண் குழந்தைகளை ஒரே சமையத்தில் பிரசவித்தாள். தாயும் சேய்களும் சுகமே இருக்கின்றனர். இவ்வித சம்பவம 1600 ம் ஆண்டில் ஜெர்மனியைச் சேர்ந்த ஹேமெலன் என்னும இடத்தில் நிகழ்ந்ததாம் என்று விஸ்பன செய்தி ஒன்று கூறுகிறது.

# திரேசம்மாவைக் கடத்திச்சென்றதாக வழக்கு

## ஐவர்மீது குற்றச்சாட்டு

## திரேசம்மா கூறிய சில ருசிகரமான சம்பவங்கள்

நமது நிருபர்

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் கலையூரில் வசிக்கும அந்தோனியினுடைய மகள் திரேசம்மா என்பவளை அவ்வூர் 1) ஞேசம்மா (2) தாவீது (3) பாக்கியநாதன் (4) வஸ்தியாம்பிள்ளை (5) சின்னத்துரையாகியவர்கள் சென்ற மாசிமீ 13ந் திகதி இரவு 8 மணியளவில், அவளுடைய பாதுகாப்பாளரிடமிருந்து கடத்திச் சென்றதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக நியாயவாதி A. H. R. வீரசூரியாவும் எதிரி சார்பாக திரு. தபயித்துரையினதும் திரு தம்பியினதும் அனுசரணையைக் கொண்டு நியாயவாதி திரு தம்பு துரைசுவாமியும் வாதித்தார.

முடிக்குரிய நியாயவாதி ஜூரிகளுக்கு வழக்கை விளங்கப்படுத்தும் போது கூறியதாவது:

இந்த எதிரிகள் இரண்டு குற்றச்சாட்டுகளில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றார்கள்

முதலாவதாக அவளுடைய சம்மதத்துடனே அல்லது சம்மதமின்லாமலோ அவளைக் கடத்திச்சென்று 3ம் எதிரி பாக்கியநாதனுக்கு விவாகஞ்செய்துகொடுக்க எத்தனித்தமை. இரண்டாவதாக அவளுடைய தகப்பனுருடைய பாதுகாப்பிலிருந்து கடத்திச் சென்றமை. திரேசம்மாவின் வயது பிறப்புச் சொப்பியின்படிக்கு 14. அவள் பிறந்தது 1922ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலாகும்.

1ம் 2ம் எதிரிகட்குத் திரேசம்மாவின் மாமனார் சந்தியாவின் வீடு தெரியும். சென்றமாசிமாதம் 13ந் திகதி இவள் சந்தியா வீட்டில்தான் வசித்தாள். இவளுடைய தகப்பனார் உயிருடனிருக்கிறார். தாயார் இறந்துவிட்டாள. இவளுடைய தாயார் இறந்தபின்தான மாமனார் சந்தியா வீட்டில் வசித்துவந்தாள் தகப்பனார், அந்தோனி மனைவியார் இறந்ததும் வேறு விவாகம் செய்துகொண்டார். இச் சிறியதாய்க்கும் திரேசம்மாவுக்கும அதிகம் பிடிக்கிறதில்லை. அதனாலேயே அவள் மாமனாரோடு போய் இருந்தாள்.

சென்ற 13ம்௳ இரவு 7 மணியளவில் தனியே திரேசம்மா அவளுடைய மாமனார் வீட்டில் இருந்தாள. 1ம் 2ம் எதிரிகள் அங்கு சென்று அவளுடைய விருப்பத்துக்கு மாறாகவோ அல்லது விருப்பத்துடனோ அவளுடைய தகப்பனார் வீட்டுக்குக் கூட்டிச் செல்வதாகச் சொல்லி அழைத்துச் சென்றனர். ஆனால் தகப்பனார் வீட்டுக்கு அழைத்துச் செல்லாமல் 3ம் எதிரியினுடைய வீட்டுக்குக் கூட்டிச் சென்றனர் 3ம் எதிரி வீட்டிலேயே 4ம எதிரியும் வசிக்கிறான். இங்கிருந்து ஓர் காரில் அவளைப் பண்டியந்தாழ்வில் வசிக்கும் ஆறுமுகம வீட்டுக்குக் கூட்டிச் சென்றனர். இவர்கள் சென்ற காரை யோசேப் பொன்னு என்பவர் செலுத்திச் சென்றார். பொலிஸ் கோட்டில் மரியை என்னுமோர் பெண்ணும் இவ்வழக்கிற் குறிப்பிடப்பட்டாள். 4ம எதிரிதான் காரைப் பிடித்து வந்தார் 5ம எதிரிதான் அவளைக் காரில் தூக்கிப் போட்டான் ஆறுமுகம் பொலிஸ் கோட்டில் 3ம் எதிரியும்பெண் திரேசம்மாவும் பண்டியந்தாழ்வில தனது இல்லத்தில் விடப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார். அடுத்த நாட்காலை, பொன்னு காரைக்கொண்டு வந்து இவர்களை ஏற்றிச் சென்று விட்டான். இச்சம்பவம் பொலிசாருக்கு அறிவிக்கப் பட்டது. பொலிசார் விசாரணையின் பொருட்டுச் சென்றபோது திரேசம்மா மரியை வீட்டிற் காணப்பட்டாள்.

அந்தோனி மகள் திரேசம்மா சொல்லிய சாக்ஷியமாவது:—

நான் மசி மீ 1922ம் ஆண்டில் பிறந்தேன். என்னுடைய தகப்பனார் பெயர் அந்தோனி; தாயார் பெயர் எலிசம். ஆறு வருஷங்களுக்கு முன் எனது தாயார் இறந்துவிட்டாள். இவள் இறந்த பின் எனது தகப்பனார் இரண்டாம்முறை விவாகஞ் செய்தார். நான் இரண்டாம் விவாகத்தின் பின்னும் எனது தகப்பனுருடன் வசித்தேன். சில காலஞ் சென்றபின் எனது சிறிய தாயார் செல்லாச்சியுடன்வசித்தேன்.

இங்கே சிலகாலம் இருந்தபின் தகப்பனுருடைய சகோதரி செல்லத்தங்கச்சியுடன் வசித்தேன். சென்ற பங்குனி மீ 1935-ம் ஆண்டில் 1-ம் 2-ம் எதிரிகளுடைய வீட்டிற் சில காலம் வசித்தேன், 1-ம் எதிரி என்னுடைய பச்சான் 2ம் எதிரி என்னுடைய அம்மான், 1ம் எதிரி 2ம் எதிரியினுடைய மனைவி.

சென்ற 13ம் திகதி நான் எனது மாமன் சந்தியா என்பவருடைய வீட்டில் வசித்தேன் இவருடன் 8 மாசக் காலமாக இருந்தேன். என்னுடைய தகப்பனார்தான் என்னை அங்குவிட்டார். தகப்பனார் அம்மானுடைய வீட்டுக்கு 4 அல்லது 5 வீட்டுக்கப்பால் இருக்கிறவர். சந்தியா எனது தகப்பனுருடைய சகோதரியை விவாகம் செய்தவர். நான் எனது மாமனுருடைய வீட்டிலிருந்து தகப்பனார் இல்லத்திற்கு இடையிடையே போகும் வழக்கமுண்டு. 1ம் 2ம் எதிரிகளுடைய வீடு எனதுமாமன் சந்தியாவின் இல்லத்திற்கு அடுத்த இல்லமாகும். இச்சம்பவத்தன்று இரவு 8மணியளவில் நான் எனது மாமன் சந்தியாவின் இல்லத்தில் தனியேஇருந்தேன் எனது மாமனும் மாமியும் 1ம் எதிரியின் இல்லத்திற்கு மீன்பிடித்து விற்றதைக்குப் பார்க்கச் சென்றவிட்டார்கள். 1ம் எதிரியின் மச்சான் சஞ்சேசவும் அங்கேதான் வசிக்கிறான் இவனும் இவர்களுடன் மீன்பிடிக்கச் செல்கிறவன். இந்தநேரத்தில் 1ம் 2ம் எதிரிகள்வந்து என்னைத் தங்களுடன் எனது தகப்பனாரின் இல்லத்திற்கு வரும்படி கேட்டார்கள். நான் அவர்களுடன் சென்றேன். ஆனால் அவர்கள் என்னைத் தகப்பனார் இல்லத்திற்குப் போகும் வழியால் கூட்டிச்செல்லாது வேறு வழியாகக் கூட்டிச்சென்று வஸ்தியாம்பிள்ளையின் இல்லத்திற்கு அழைத்துப்போனார்கள். இங்கே தான் 3ம் எதிரியும் வசிக்கிறவன். 3ம் 4ம் எதிரிகள் மச்சான் முறை பூண்டவர்கள் இவர்கள் என்னை றெயில் றோட்டால்தான் கூட்டிச் சென்றார்கள். அவர்களை ஏன்என்னை இந்தவழியால் கூட்டிச்செல்வதாகக் கேட்டபோது மரியை சொல்லியதாவது:—

"எங்களுடன்வா ஞேசை மரியையிடம மா வாங்கவேணும், அதையும் வாங்கிக்கொண்டு போவோம்" என்றான். ஞேசைமரியை 1ம் எதிரியினுடைய மச்சாள். அங்கே அவர்கள் ஓர் ஒழுங்கையில் விட்டுவிட்டுச் சென்றார்கள். சிறிதுநேரம் சென்றபின் 4ம 5ம் எதிரிகளும் 3ம் எதிரியின் மூத்தசகோதரி மரியையும் அவ்விடம் வந்தார்கள். 4ம் எதிரி எனது இரு காலகளையும் பிடித்தார். நான் சத்தமிட்டேன். அப்போது 4ம் எதிரி சத்தமபோடாவண்ணம் தனது கையால் எனது வாயைப் பொத்தினர். 4ம் எதிரியும் மரியையும்தான என்னைக் காரு[illegible] அழைத்துச்செல்றார்கள். ஆனால் 5ம் எதிரியே என்னைச் செந்நாகலில் தூக்கிக் காரில் போட்டார். காரில் மரியையும் 4ம்5ம்எதிரிகளும் நானும்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# தேவை

6க்கும் 10க்கும் இடையே யுள்ள ஹார்ஸ் (குதிரை)ப் பவருள்ளஆயில் என்ஜின் ஒன்று தேவை. பழுதற்றதாகவும், பாவிப்புக்கு ஏற்றதாகவும் இருத்தல்வேண்டும்.

விலை விபரங்களுடன் பின் வரும் விலாசத்திற்கு எழுதவும்.

**மானேஜர்,**
*இந்துசாதனக் காரியாலயம்,*
*யாழ்ப்பாணம்.*


*வாழ்க அந்தணர் வானவ ரானினம்*
*வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக*
*ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே*
*சூழ்க வையக முந்துயர் தீர்கவே.*


**இ ந் து சா த ன ம்.**

*யாழ்ப்பாணம்: தாதுஸு*
*ஆடிமீ கஉவ வியாழக்கிழமை*


## ஐரோப்பாவின் ஆபத்தான நிலைமை

உலகம் முழுவதும் இப்பொழுது ஐரோப்பிய ராச்சியங்களின் விவகாரங்களிலேயே கண்ணுங்கருத்துமாக இருக்கின்றதெனலாம். எப்போது எங்கே ஒரு மகா யுத்தம் தொடங்கு மென்பது தெரியவில்லை. ஐரோப்பிய தத்துவராச்சியங்கள் ஒவ்வொன்றும் தத்தம் ஆயுத வலியையும் சைநிய வலியையும் பெருக்கி எந்தச் சமையத்திலும் யுத்தம் நேரக்கூடுமென்ற எண்ணத்தினல் தனித்தனி ஆபத்தயாகவே இருக்கின்றன.

தத்துவராச்சியங்களுள் எங்களைத் தடுத்தாட்கொண்டருளும் பிருத்தானிய ராச்சியமும் ஒன்றன்றே! இந்தப் பிருத்தானிய ராச்சியம் இச் சமையத்தில் எவ்வகையான ஆபத்தங்களைச் செய்கின்றதென ஆராய்வோம். பிருத்தானியர் தங்கள் கடற்படை ஆகாயப்படைகளை இயன்றவரையிற் பெருக்கிவருகின்றனர். நீடித்த யுத்தம் சேருங்காலத்தில் உணவுக்கு முட்டுப்பாடில்லாத விதமான ஒழுங்குகளைச் செய்கின்றனர்; 50 வயசுக்கு மேற்படாதவர் ஒவ்வொருவரும் போர் நேருங் காலத்துத் தம் நாட்டைப்பாதுகாக்கும்படி யுத்த முனையிற் சென்று ஆண்மையுடன் சமர் செய்ய வேண்டுமெனத் திட்டஞ் செய்திருக்கின்றனர். இவைகளைத் தவிர இன்னும் என்ன என்ன உபாயங்களைத் தந்திரங்களைக் கையாள வேண்டுமோ அவைகளையெல்லாம் அந்தந்த நேரத்திற் கையாளுதற்கு நமது பிருத்தானியா சித்தமாயிருக்கின்றனர்.

இப்படி யெல்லாம் ஆபத்தமாக இருந்தாலும் பிருத்தானியருக்கும் பிரான்ஸியருக்கும் இத்தலிய ஜர்மனிய சர்வாதிகாரிகளாகிய முஸோலினி ஹிட்லர் என்னுமிருவரையும் பற்றிய நிலை நீங்கியபாடில்லையெனலாம். அச்சர்வாதிகாரிகள் இருவர் விஷயத்திலும் பிருத்தானியர் "புறம் நட்டு அகம் வேர்ப்பார்" என்ற நிலைமையில் போலிநட்புப் பாராட்டியே வருகின்றனர். ஹேர் ஹிட்லரின் கொலலுப்படி இற்றைக்குச் சிலமாசங்கட்கு முன்னர் ஒருவன் துப்பாக்கிப் பிரயோகஞ்செய்தபோது [illegible] ஹிட்லர் மாண்டுபோக [illegible] ஹிட்லர் தப்பினரல்லரோ? அப்படி அவர் உயிர் தப்பியதையிட்டு [illegible]க்கு மகிழ்ச்சியான தந்திச் சமாசாரத்தை முதன்முதல் அனுப்பியவர் நமது அரசசக்கரவர்த்தியாகிய எட்டாம் எட்வேட் மன்னராவர். இற்றைக்குச் சில தினங்கட்கு முன்னர் எங்கள் அரச சக்கரவர்த்திக்கு ஒரு உன்மத்தன் உயிர்ச்சேதம் விளைக்க முயன்றவிடத்துச் சக்கரவர்த்தி எவ்வகையான அபாயமுமின்றித் தப்பிவிட்டாரென்றதைக்கேட்ட மாத்திரத்தே முதன் முதல் மகிழ்ச்சித் தந்திச் சமாசாரம் அனுப்பியவர் ஹேர் ஹிட்லராவர். புறத்தே இப்படியான நட்பு இவர்கட்கிடையே பாராட்டப்படுகின்றது. இவர்கள் பரஸ்பரம் அகத்தேகொண்டுள்ள நச்சுப் பகைமை அஞ்சத்தக்கதாம்.

இனி இந்தத் தத்துவ ராச்சியங்கள் மேலே சொல்லப்பட்ட சர்வாதிகாரிகள் இருவருக்கும் பயந்து போலும் ஜெகிவாமகாநாட்டிற்செய்து கொண்ட உடம்படிக்கைகள் சமாதான நிபந்தனைகள் எல்லாவற்றையும் மெல்ல மெல்லக் கை நழுவ விட்டுவிட்டன. எந்தத் தத்துவ ராச்சியம், வலிகுறைந்த எந்த ராச்சியத்தை அடித்தாலும் ஏனைய தத்துவ ராச்சியத்தினர் ஏன் என்று கேட்கப் போவதில்லை. தம்மோடு நேரில் ஒரு தத்துவ ராச்சியம் போர்க்கறை கூவி வந்தால்மாத்திரம் தாமும் அரைகுறை மனசோடு யுத்தத்திற்குப் புறப்பட நோக்கங்கொண்டிருக்கிறார்கள். அபிஸீனிய சக்கரவர்த்திக்கு இவர்கள் செய்த துரோகமே இவர்கள் இன்னமும் இப்படியான செயலைச் செய்வரென்பதற்கு அறிகுறியாகும். இந்தவிதமான சந்தேக நிலைமையில் ஐரோப்பிய தத்துவ ராச்சியங்கள் இன்னமும் எவ்வளவு காலத்திற்கு நடைபெறுமென்பதை இருந்து பார்ப்போம்.

## கிறிமினல் அப்பீல் நீதிஸ்தலம்

இலங்கையின் புதிய அற்றேணி ஜெனரலாகிய மிஸ்ரர் ஹாவர்ட் என்பார் சென்ற திங்கட்கிழமையன்று இராசவிசுவாசப்பிரமாணஞ் செய்து கொண்டார். இவர் இலங்கையில் கிறிமினல் அப்பீல் நீதிஸ்தலம் இல்லாததுபற்றி ஆச்சரியப்பட்டிருத்தல்அவதானிக்கத்தக்கது. இந்த இலங்கையில் ஒரு பெருங்குறையாகவே இருந்து வருகிறது. பல்லாண்டுகளாக இப்படியான நீதிஸ்தலம் ஒன்றை ஏற்படுத்துதற்கு அதனேடு சம்பந்தப்பட்டவர்கள் மிகப் பெரிதும் முயன்று வந்தார்கள். கிறிமினல் அப்பீல் நீதிஸ்தலம் இலங்கைபோன்ற ஒரு நாட்டிற்கு மிகமிக இன்றியமையாத ஒன்றாகும். வழக்குகளில், எல்லாக்கட்சியினரும் தமது வழக்குப் பூரணமாக விசாரிக்கப்பட்டு உண்மையில் நியாயமான தீர்ப்பே அளிக்கப்பெற்றிருக்கின்றது என்பதில் திருப்திப்படுதல் வேண்டும். இன்றேல், அவர்கள் தமது அதிருப்தியை எடுத்துக் காட்டி நீதிபெறுதற்கு கிறிமினல் அப்பீல் நீதிஸ்தலங்கள் அவசியம் வேண்டப்படுவனவாம். உதாரணமாக, விசாரணை நீதிஸ்தலங்களில் நீதபதியோ அல்லது ஜூரிமாரோ தெரிந்தோ தெரியாமலோ ஏதாவது பிழை இழைத்துவிடின், அதனைநிவிர்த்தி செய்வதற்கு அப்பீல் நீதிஸ்தலங்களே தக்கவை. கிறிமினல் வழக்குகள் சம்பந்தமாக அப்பீல் செய்வதற்கு ஏனைய நாடுகளிலுள்ளவை போன்ற வசதிகள் இந்நாட்டில் இல்லை. சாதாரண வழக்குகளைக் காட்டிலும் கிறிமினல் வழக்குகளிலே விடப்படும் பிழைகளே அவசியம் நிவிர்த்திசெய்யப்படவேண்டியனவாகும். ஏனெனில் கிறிமினல் வழக்கில் நியாயத் தவறின், எதிர் குற்றவாளி என்ற அவமானத்துக் குள்ளாகின்றன். அதனல் சில காலங்களில் அவன் சிறைவாசஞ் செய்யவும் நேரிடுகின்றது. இனி, கொலை வழக்குகளிலோ, நியாயத் தவறின், நிரபராதிகளாகிய எதிரி சில காலத்தில் தூக்குத்தண்டனைக்கும் ஆளாகவேண்டி நேரிடுகின்றது. இஃது எத்துணைப் பாதகமான செயலாகும். இத்தகைய சமையங்களில் அப்பீல் செய்து கொள்ள விரும்புவோர், இங்கிலாந்திலுள்ள பிரிவி கவுன்சிலுக்கே (Privy Council) மனுச் செய்து கொள்ளவேண்டியவராவர். இஃது எளிதிற் செய்யக்கூடியது மல்ல. இதற்குப் பெருந்தொகைப் பணம் வேண்டும். போதிய பணமுள்ள எதிரிகளேயன்றி ஏழை எதிரிகள் பலர் இதனைச் செய்துகொள்ள வழியற்றவரா யிருக்கின்றனர்.

எனவே, உண்மையில் நிரபராதிகளாகவிருக்கும் விசாரணை நீதிஸ்தலங்களில் நீதபதியோ பிறரோ அறியாமல் இழைத்த பிழைக்காகச் சிலகாலங்களில் இவர்கள் சிறைத் தண்டனையோ தூக்குத் தண்டனையோ அநுபவிக்க நேரிடுகின்றது. இஃது எத்துணைப் பரிதாபகரமான நிலையாகும். இதுவேயுமன்றி, அப்பீல்செய்து கொள்ளுதற்கு இங்குள்ள விசாரணை நீதிஸ்தலங்களில் அநுமதி பெறுதலே மிக்க கஷ்டமாகும். இவ்வாறு அநுமதி அளிக்கப்பெறாத ஒருவர் இங்கிலாந்து சென்று நேரிலேயே தமது நியாயத்தை எடுத்துக்காட்டி, விசாரணை நீதிஸ்தலத் தீர்ப்பு நீதியற்றது எனத் தீர்ப்புப்பெற்ற சம்பவமும் நடக்கின்றதென்றால், நிரபராதிகளான சில எதிரிகள் குற்றவாளிகளெனத் தீர்க்கப்படுதல் உண்மையிற் பரிதபிக்கக்கூடிய நிலையாகும். ஆகவே, எவரும் எளிதில் அப்பீல் செய்து கொள்ளக் கூடியதாக இலங்கையிலேயே ஒரு கிறிமினல் அப்பீல் நீதிஸ்தலம் நிறுவப்படுமாயின், அதனல் இந்நாட்டில் நீதிநிலவுதற்கு வசதியுண்டாகும்.

ஆகவே இத்தகைய ஒரு நீதிஸ்தலத்தை நிறுவுதற்கு நமது புதிய அற்றேணி ஜெனரல் முயல்வாரென நாம் எதிர்பார்க்கின்றோம். அற்றேணி ஜெனரலைப் போலவே, இலங்கைக்குப் புதிய பிரதம நீதிபதியாக வந்திருக்கும் ஸர். ஸிட்னி ஏப்ரஹாம்ஸ் என்பாரும கிறிமினல் அப்பீல் நீதிஸ்தலங்களின் இன்றியமையாமையையும், உபயோகத்தையும் நன்கறிந்தவர் ஆவர். அவர் கோல்ட் கோஸ்டில் நீதபதியாக விருந்தபோது, அங்கு ஒரு கிறிமினல் அப்பீல் நீதிஸ்தலத்தை நிறுவியிருக்கின்றார். ஆகவே, இவரும், புதிய அற்றேணி ஜெனரலும் ஒருங்கு சேர்ந்து இதனை அமைத்து வைப்பார்களாயின், அவர்களது அரியபணி இலங்கை மக்களால் என்றென்றும் போற்றப்படத்தக்க தொன்றாகும்.

## கொலைசெய்ததாகக் கூறிய தமிழன்

### பைத்தியசாலையில் வைக்கப்பட்டான்

கோலாலம்பூர், ஜூலை 15-

சில நாட்களுக்கு முன்பு ஒருதமிழன் பாகாங்கைச்சேர்ந்த ஜெராண்டட் பொலிஸ் ஸ்டேஷனுக்கு நடந்து சென்று கோலாலம்பூர் சுபாங் ரோடு 8வது மைலிலுள்ள தோட்டத்தில் ஒரு தமிழ் ஸ்திரீயைக் கொலைசெய்துவிட்டதாகச் சொன்னன்.

நேற்று அவன் கோலாலம்பூருக்குக் கொண்டுவரப்பட்டு பொலிஸாரால் கேட்கப்பட்டபொழுது, நான் அவ்விதம் சொல்லாவிட்டால் தன்னைப் பொலிஸார் கைது செய்யமாட்டார்களென்று சொன்னன்.

"நான் ஒரு மிருக வாழ்க்கையை நடத்த விருப்பமில்லாததால், ஒரு ஜட்ஜினல் மரண தண்டனை விதிக்கப்படவேண்டுகிறேன்"

மேலும் அவன் தான் யாரையோ "பனதுகுள்" கொலை செய்துவிட்டதாகக் கூறினன்.

அவன் தட்சங் பப்பூத்தானிலுள்ள பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டான்.

## "அந்த நாளில் நானும் அடிவாங்கினேன்"

சென்ற திங்கட்கிழமை (27-7-36) கண்டிப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் இஸ்லாம் பையனொருவன் தன உபாத்தியாயர் தான் பாடம் ஆயத்தஞ்செய்யாமையையிட்டு தனக்கு உறைக்க அடித்துவிட்டாரென்று முறையிட்டான்.

நீதிபதி "நான் படிக்கும் காலத்தில் பலமுறை உபாத்தியாயர்களிடம் அடிபட்டேன்; அதனலெனக்கு நன்மை வந்ததேயன்றித் தீமை வந்ததில்லை; இப்படியான விஷயத்தில் வழக்கு வரக்கொண்ணுது" என்று சொல்லி முறைப்பாட்டை ஏற்காது விட்டனர்.

# சைவவித்தியா விருத்திச்சங்கம்

## ஓர் வேண்டுகோள்

சைவ வித்தியா விருத்திச் சங்கம் இலங்கையில் இந்துசமயத்தவர் ஒவ்வொருவருக்கும் கல்வியறிவையும் இந்துசமயஅறிவையும் ஊட்டவேண்டும் என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் செய்து வந்த அரிய தொண்டைத் தொடர்ந்து செய்யும் நோக்கமாக, 1923 ம் ஆண்டு டிசம்பர் மீ காலஞ்சென்ற ஸர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களது தலைமையிற் பல பிரபல இந்துக்களால் நிறுவப் பெற்றது.

1924 ம் ஆண்டிலே அது தொண்டாற்றத் தொடங்கிப் பதிவு செய்யப் பட்டு விட்டது

இச் சங்கம் பன்னிரண்டாம் ஆண்டுகளாகச் செய்து வந்த அரிய பணியின் பலனாக அதன் ஆதிக்கத்தில் இப்போது 83 பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றில் 12 500 மாணவர் கற்று வருகிறார்கள்; 450 ஆசிரியர்கள் கற்பித்து வருகிறார்கள். இதுவேயுமன்றிச் சங்கத்திற்கு 5 லக்ஷம் ரூபா பெறுமதியான நிலங்களும் சொத்துக்களும் இருக்கின்றன

மேற் சொல்லப் பட்ட 83 பாடசாலைகளில் ஒன்று அநாதப் பாடசாலையாகும்; இதில் 80 பிள்ளைகள் கற்று வருகிறார்கள்.

ஆரம்பத்திற் சிறிய காலமாகிய 8 வருஷத்திற் கிடையிலேயே 200 மாணவர்களை ஆசிரியர்களாக மாற்றியுள்ள திருநெல்வேலிச் சைவாசிரிய போதனா பாடசாலையும் சங்கத்தின் பாடசாலைகளில் ஒன்றாகும்

மேற்படி போதனா சாலையில் 61 மாணவர்களும் ஏனைய பாடசாலைகளில் ஆசிரிய தராதரப் பத்திர வகுப்பில் 98 மாணவர்களும், சிரேஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப் பத்திர வகுப்பில் இன்னும் பலரும் கற்று வருகின்றார்கள்.

சங்கத்தின் கீழ் இரு கனிஷ்ட ஆங்கில உயர்தரப் பாடசாலைகள் இருக்கின்றன.

ஏழு இலவச துவிபாஷா பாடசாலைகள் இருக்கின்றன. 72 தமிழ்க் கலவன் பாடசாலைகள் இருக்கின்றன. இவற்றில் இருபது பாடசாலைகளில் ஆங்கிலமுங் கற்பிக்கப் படுகின்றது. இப்போது மொத்தம் 2000 பிள்ளைகள் இலவசமாக ஆங்கிலம் கற்பிக்கப் படுகின்றார்கள்.

இப்பாடசாலைகளில், 15 பாடசாலைகள் அரசினர் நன்கொடை பெறக் கூடியதாக இன்னும் பதிவு செய்யப்படவில்லை. சென்ற காலத்தில் ஏறக்குறைய $1\frac{1}{2}$ லக்ஷம் ரூபா ரொக்கமாகச் சங்கத்தார் சேகரிக்கப்பட்டது. இதில் 13,500 ரூ. மலாய் நாட்டிலுள்ள நம்மவரால் உபகரிக்கப்பட்டது. பெரும்பாலும் சனங்கள் நிலங்களாகவும் கட்டிடங்களாகவுமே, சங்கத்திற்கு உபகரித்திருக்கிறார்கள். மிகச் சிலவிடங்களில் புதிய பாடசாலைகளை அமைப்பதற்காகவும், பழைய பாடசாலைக் கட்டிடங்களைப் பெருப்பிக்கும் நோக்கமாகவும் நிலங்கள் சங்கத்தால் வாங்கவும் நேரிட்டது இன்னுஞ் சில இடங்களில் புதிய பாடசாலைகளுக்கு கட்டிடங்கள் புதிதாக அமைக்கப்படவும், பெருப்பிக்கப்படவும் வேண்டி நேர்ந்தது.

எம் நாட்டில், 1,10,000 இந்துப் பிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்களில் ஏறக்குறைய 90,000 இந்துப் பிள்ளைகள் பாடசாலைகளுக்குப் போவதே இல்லை. ஏறக்குறைய 40,000 இந்துப் பிள்ளைகள் இந்து சமய அறிவையும் கல்வியையும் பெறுதவர்களாக இருக்கின்றனர்.

கிறிஸ்தவக் கல்விச் சங்கத்தின் கீழ், நடைபெறும கிறிஸ்தவ பாடசாலைகளில் ஏறக்குறைய 1,40,000 கிறிஸ்தவரல்லாத மாணவர்கள் கற்கின்றனர். இப்பாடசாலைகள் 4500 கிறிஸ்தவ ஆசிரியர்களுக்கு வேலையளிக்கின்றன. இவ் வேலை [illegible]ள் அனைத்தும் கிறிஸ்தவர்களுக்கே செல்கின்றன.

பாடசாலைகளே இல்லாத பல கிராமங்கள் இலங்கையில் இருக்கின்றன. பல கிராமங்களில் இந்துசமயப்பிள்ளைகளுக்கு இந்துக்களல்லாதாரே உதவி புரிந்து வருகின்றனர். பெண் பிள்ளைகளுக்கென ஓர் அநாதப் பாடசாலை அமைத்தல் மிக அவசியம் என உணரப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கென ஓர் இந்துக் கலாசாலையும் அவசியம் வேண்டப்படுகின்றது. இதுவுமன்றிச் சுதேச வைத்தியபாடசாலையொன்றும் வைத்தியசாலையொன்றும் நிறுவப்படுதலும் அவசியமாகும்.

விவசாயம், கைத்தொழில், தச்சுத்தொழில் முதலியவை சம்பந்தமான கல்வியும் வளர்க்கப்பெற்று வருதல் வேண்டும்.

இன்று இலங்கையில் மிகப்பெரிய இந்துவித்தியாசங்கமாக இருப்பது சைவ வித்தியாவிருத்திச் சங்கம் ஒன்றேயாகும். இச்சங்கம், தேவையானோருக்கும் ஏழைகளுக்குமே பெரிதும் உதவிபுரிந்து வந்திருக்கிறது. இச்சங்கம் இந்துசமயத்தார் ஒவ்வொருவரது உதவியையும் எதிர்பார்க்கின்றது சென்ற காலத்தில், செல்வரும் வறிஞரும உயர்ந்தோரும், தாழ்ந்தோரும் அதற்கு உதவிபுரிந்து வந்தனர். அது இந்துசமய அறிவையும் கல்வியையும் பரப்பெருமை கொள்ளும ஒவ்வொருஇந்துவும, சிவபிரான்திருநாமத்திற்காகத் தம்மாலானவரையுதவிபுரிந்தவருமாறசங்கம்இந்துக்களை வேண்டிக்கொள்ளுகின்றது "நன்றே செய்யவும் வேண்டும்; அதுவும் இன்றே செய்யவும்; அதுவும் இன்னே செய்யவும் வேண்டும்" என்னும் கபிலரது பொன் மொழிகளைச் சங்கம் உங்களுக்கு ஞாபகப் படுத்துகின்றது. வருஷம் ஒன்றுக்கு 10 ரூபா உதவும் ஒரு இந்து இச்சங்கத்தில் அங்கத்தவராகிறார்.

நீங்களும் அதில் அங்கத்தவராகச் சேர்ந்து உங்கள் சமயத்திற்காக உதவிபுரிவீர்களா?

சு. இராசரத்தினம்,
*மானேஜர்.*
எஸ். சுவாமிநாதன்,
*கௌரவகாரியதரிசி*

யாழ்ப்பாணம்
29-7-36

## ஆருமற்றோர்க்குத் தெய்வந் துணை

### அபிஸீனியாவில் இத்தலியர்படும்பாடு

தலைநகராகிய அடிஸ் அபாபாவில் இத்தலியர் பெரிதும் கஷ்டப்படுகின்றனர் இப்பொழுது அபிஸீனியப் பிரதிதேசாதிபதியாயிருக்கும் மார்ஷல் கிருஸியானி அபிஸீனியாவிலிருந்து எவ்வகையான சமாசாரங்களையும் வெளியிடவொண்ணுதென அங்குள்ள அந்நியநாட்டுத் தானபதிகட்குக் கட்டளை செய்திருக்கின்றார். இதனல் பிருத்தானிய அமரிக்க பிரான்ஸிய, ஜர்மனிய பெல்ஜியன் தானபதிகள் முறையே தங்கள் நாட்டு அரசினருக்கு எவ்வகையான சமாசாரத்தையும் அனுப்பிக் கொள்ள முடியாத நிலைமையில் இருக்கின்றனர்

அபிஸீனிய கொள்ளைக்காரர் அடிஸ் அபாபாவிற்கும் டிறிடாவாஎன்னுந் தானத்திற்குமிடையே புகையிரதப்பாதையைச் சிதைத்துவிட்டார்கள். இப்படிச் செய்தமையினுற் புகையிரதப்போக்கு வரவு தடைப்படலாயிற்று. தலைநகருக்குத் தெலியென்னுமிடத்திற்குமிடையேயுள்ள தெருவீதிகள் தாக்கிக்க பிகளைக் கலகக்காரர் சிதைத்துவிட்டனர். ஹரார் பிரதேசத்தில் இத்தலியருக்கும் அபிஸீனியருக்குமிடையே கடும் யுத்தம் நடைபெறுகின்றது. மழைபெய்யத் தொடங்கிவிட்டமையினுல் இத்தாலியர் போசற்றும் வருதற்கும முடியாமல் இடர்ப் படுகின்றனர். இத்தலியர் அடிஸ்அபாபாவை விட்டு மீளமுடியாத நிலைமையில் இருக்கின்றனர்.

# புதிய அற்றேணி ஜெனரல்

## திங்கட்கிழமை இராச விசுவாசப்பிரமாணஞ் செய்துகொண்டார்

### புதிய நீதிபதியின் பாராட்டு

ஜூலை 28—

நேற்றுப் பிரதான அடபீல் கோட்டில் பிரதம நீதிபதி, நீதிபதி திரு டால்டன் இருவர் முன்னிலையிலும் இலங்கையின் புதிய அட்டர்னி ஜெனரல் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார். ஸிவில் கிரிமினல் நியாயவாதிகளும் மற்றப் பிரமுகர்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

சுப்ரீம் கோர்ட் ரெஜிஸ்திரார் கௌரவ எம். ஜே ஓ. ஹேவார்ட் இலங்கையின் அட்டர்னி ஜெனரலாக நியமிக்கப்பட்டிருப்பதைக் குறிக்கும் நியமனப் பத்திரத்தை வாசித்தார் பிரதம நீதிபதி புதிய அட்டர்னி ஜெனரலுக்கு ராஜ விசுவாசப் பிரமாணஞ் செய்து வைத்தார்.

### "முதல்சட்டக் காரியதரிசியாக வரப்போகிறீர்"

பிரதம நீதிபதி புதிய அட்டர்னி ஜெனரலுக்குப் புகன்ற மொழிகள் வருமாறு:—

திரு அட்டர்னி அவர்களே! தங்களுக்கு ராஜ விசுவாசப் பிரமாணஞ் செய்து வைக்கும் மகிழ்ச்சிக்குரிய கடமையைச் செய்தேன். சொந்தக் காரணங்களை முன்னிட்டு இந்தக் கடமை எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்தது. தாங்கள் இலங்கையின் அட்டர்னி ஜெனரலாக நியமிக்கப் பட்டிருப்பது பற்றிப் பாராட்டுகின்றேன். தாங்கள் சீக்கிரத்தில் இலங்கையின் முதல் சட்டக் காரியதரிசியாகவும் நியமிக்கப் படுவீர்கள். குடியேற்ற நாட்டு நியாய இலாகாவில் தங்களுக்கு மிக முக்கியமான அட்டர்னி ஜெனரல் பதவி அளிக்கப் பட்டிருக்கிறது. இந்த முக்கியமான பதவியுடன் மகத்தான பொறுப்புக்களும் ராஜ்ய நிர்வாக நியாய சம்பந்தமான சிரமமான கடமைகளும் சேர்ந்திருக்கின்றன.

தங்களுக்கு முன் இந்தப் பதவியிலிருந்த கனவான்கள் மிகவும் திறமையாக இந்தக் கடமைகளைச் செவ்வையாக ஆற்றி வந்தது போலத் தாங்களும் செய்ய முடியுமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. தாங்கள் இங்கிலாந்தில் நியாயவாதித் தொழிலிலும் மற்றும் வெளிநாடுகளிலும் பல உத்தியோகங்களிலும் நல்ல அநுபவம் பெற்றிருப்பீர்கள்.

### கஷ்டமான வேலைகள்

தங்களுக்கு முன்பாக மிகவும் கஷ்டமான வேலைகள் காத்திருக்கின்றனவென்பதைத் தாங்கள் அறியாமல் இல்லை. சட்ட சம்பந்தமான சீர் திருத்தங்களும்பல செய்யவேண்டியவாய் இருக்கின்றன. இலங்கை தங்களை அட்டர்னி ஜெனரலாகப் பெறுவதற்குப் பெரிதும் தகுதியுள்ளது. இலங்கை அதன் புதிய அட்டர்னி ஜெனரலிடம் வெகுவாக எதிர் பார்க்கிறது. இதில் இலங்கை ஏமாற்ற மடையாதென்று நான் தைரியமாகச் சொல்ல முடியும். தங்களுடைய புதிய பதவியில் தாங்கள் பெருமையடைய வேண்டுமென விரும்புகிறேன்.

### நீதிபதிகளின் ராஜ விசுவாசப் பிரமாணம்

விடுமுறையிலிருந்துப் நீதிபதி திரு பொய்ஸருக்கும் பதிலாகச் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதியாக நியமிக்கப் பட்டிருக்கும் அசைஸ் கமிஷனா கௌரவ திரு. வி. எம். பெர்னாண்டோ நேற்றுப் பிரதம நீதிபதி முன்பாகக் கோர்ட்டு அறையில் ராஜ விசுவாசப் பிரமாணம் செய்தார்.

மேற்கு வட்டாரத்திற்கு அஸைஸ் கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கும் கௌரவ திரு. ஏ. ஈ. கியூனிமானும் நேற்றுப் பிரதம நீதிபதி முன்பாகப் பிரமாணம் செய்தார்.

# திரேசம்மா வைக்கடத்திச் சென்றதாக வழக்கு

## தீர்ப்பு

[6ம் பக்கத் தொடர்]

எதிரி பக்கத்து நியாயவாதி மிகவும் தெளிவாக வழக்கிலுள்ள வித்தியாசங்களை எடுத்துக் கூறியபின் ஜூரிகள் முதலாம் இரண்டாம் எதிரிகளை ஏகமனதாகச் சாட்டப் பட்ட இரு குற்றங்களிலும் குற்றவாளிகள் அல்லவென்று செப்பினர். மூன்றும் நான்காம் ஐந்தாம் எதிரிகளை ஏகமனதாக முதலாம் குற்றச்சாட்டில் குற்றவாளிகளல்லவெனக் கூறினர். ஆனால் இவர்கள் இரண்டாம் குற்றச்சாட்டின்பேரில் ஜூரிகளிற் சாதகமாக ஒருவரும் பாதகமாக அறுவருமாக அபிப்பிராயந் தெரிவித்தனர். எனவே, இரண்டாம் குற்றச்சாட்டின்பேரில் அவர்கள் குற்றவாளிகளெனக் காணப்பட்டார்கள். நீதியாசர் எதிரிகளைப்பார்த்து நீங்கள் அறிவுக்குறைவால் இதைச் செய்திருக்கிறீர்களெனத் தெரிகிறது. திரேசம்மா தன்னுடைய எண்ணத்துடன் வந்தபோதிலும் அவளை அவளுடைய பாதுகாப்பாளரிடமிருந்து கூட்டிச்சென்றது தவறாகும் என்னும் கருத்துப்படக் கூறியபின், 1ம் 2ம் எதிரிகளை விடுதலைசெய்தார். 3ம் 4ம் 5ம் எதிரிகளைத் தனித்தனி 250— ரூபாவில் இரண்டு வருஷத்துக்குநன்னடத்தையிலும் தனித்தனி 50 ரூபா அரசாங்கத்தாரின் செலவுப்பணமாகக் கொடுக்குமாறுக் தீர்ப்புக்கூறினர்.

# உருஷியாவிற் கல்வி அபிவிருத்தி

## பத்திரிகை படிப்போர்களின் தொகை அதிகரித்திருக்கிறது

மாஸ்கௌ, ஜீலை 18.

சமாசாரப்பத்திரிகைகளின்சுயேச்சை ரஷ்யாவில் பறிக்கப்பட்டிருந்த போதிலும், 1936ல் 10.000 சமாசாரப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்படுகின்றன. அவைகள் 37,000,000 பிரதிகளை வெளியிடுகின்றன. புரட்சிக்கு முந்தி ரஷ்யாவில் 859 பத்திரிகைகள் இருந்து வந்தன: பத்திரிகைகள் 50 பாஷைகளில் பிரசுரிக்கப்படுகின்றன.

பத்திரிகா சுதந்திரப் பறிக்கப்பட்டோ, அல்லது. கட்டுப்படுத்தப்பட்டோ இருக்கிற இதர நாடுகளில் பத்திரிகை வாசிப்பவர்கள் விசேஷமாய்க் குறைந்துவிட்டார்கள். இவ்விதமிருக்கையில் சோவியத் ரஷ்யாவில் மட்டும் பத்திரிகை வாசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக வேண்டிய காரணமென்ன?

முதலாவதாக சோவியத் அரசாட்சியால் படிப்பு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. 1916ல் 20சத விகித பிரஜைகளுக்குமேல் எழுதப் படிக்கத் தெரியாது. இப்பொழுது எழுதப் படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை 90சத விகிதத்திற்கு மேலிருக்கிறது.

இரண்டாவதாக,சர்வாதிகார அரசாங்கத்தின் துணையாக சோவியத் பத்திரிகைகளிருந்து வருகின்றன. அரசாங்கம் பிரஜைகளின் நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு வருகிறது. அரசாங்கத்தை ஆண்டு வருகிற பொதுவுடமைக்காரர்கள் தங்கள் பத்திரிகைகளை அநேகம் பேர் வாசிக்கும்படி முயற்சி எடுத்து வருகிறார்கள்.

"ஒரு கட்சிக்கும் அதன் பிரஜைகளுக்கும் சம்பந்தம் ஏற்படும்படி செய்வது பத்திரிகைகள்தான்.

# காதலனிடம் பறந்துசென்ற காரிகை

## மரணம் முந்தியதால் ஏமாற்றமடைந்த பிரபுவின் புத்திரி

லண்டன் ஜூலை 26—

பாரர் பிரபுவின் மகள் ஆன் என்பவளைத் திருமணஞ் செய்வதற்காகப் பர்மாவிலிருந்து பிரிட்டன் வந்து கொண்டிருந்த மிஸ்டர் டேவிட் லிஸ்டர் பெல்கிரேட்டில் வைத்து மரணமடைந்தார். அவர் மலேரியா ஜுரத்தினால் பிடிக்கப்பட்டிருந்ததுடன் விமானத்திலிருந்து பெல்கிரேட்டில் இறக்கப்பட்டார்.

மிஸ் ஆன் பாரர் ஓர் மலேரியா நிபுணருடன் பெலகிரேட்டுக்குப் பறந்து சென்றார்.

ஆனால் மிஸ்டர் லிஸ்டர் இறந்து சிலமணி நேரங்களுக்குப் பின்னைதான் பெல்கிரேட் போய்ச் சேர்ந்தார்.

# உலகம் பலவிதம்

—0—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மஞ்சத்தைப் பார்த்தவர்கள் எவரும் அற்புதத்தோடு தம்மனத்தில் எழுந்தவற்றை வெளியிடலாயினர்:—"மஞ்சத்தில் நிற்கும் அந்த ஆசாரிதானே இதைச் செய்திருக்கவேண்டும்! உந்த ஆசாரியினுடைய கைநுட்பம் மெச்சத்தக்கது" என்றார் சிலர். "அது மெச்சத்தக்கதுதான; இந்த அருமையான மஞ்சத்தை எவருடைய பொருளுதவியுமில்லாமல் தன்பொறுப்பிலே செய்வித்த அந்தப்புண்ணியவான் கந்தையாச் செட்டியின் தருமசிந்தனை பெரியதல்லவா" என்றார் ஒருவர். "போதிய பொருள் இருக்கிறது இதைச்செய்விப்பதற்கு என்ன வசதியினப" என்றார் இன்னொருவர். "அப்படியல்ல, இல்லாளுக் கன்பில்லைப பொருள் ஏவல் மற்றெல்லாமிருந்தும் அவற்கென்செய்யும்" என்றவிதமாக பணம் இருந்தால் மாத்திரம் போதுமா? தருமசிந்தனையும் வேணுமல்லவா; அந்தத் தருமவானுடைய எண்ணத்தின்படியல்லவா இந்த மஞ்சமும் நிறைவேறியிருக்கிறது" என்றார் ஒரு படித்தவர். "மச்சான்! இந்த மஞ்சத்தைப் பாராதவன் புண்ணெடி" யென்றான் தன் வீட்டு முன்றிலில் நின்று மஞ்சத்தைப்பார்த்த ஒரு பேரிளம் பெண். இப்படி இவர்கள் பலவாறு பேசிக்கொள்ள மஞ்சமும் நல்லூர்ப் பெருமான் திருவீதியை அடைந்தது.

# மந்திரிமார்களின் குட்டிக் கரணம்

## முதன்முதல் அடைந்த தோல்வி

### தலைவரின் சமயோசிதமான செயல்

கடைசியாக மந்திரிகள் வரவுசெலவுத் திட்டத்தில் சட்டக் காரியதரிசிக்கு வேண்டிய செலவுகளையும் சேர்த்துவிட்டனர். இதிலிருந்து மந்திரிகளுக்குத் துணிவு கிடையாதென்று தெரிகிறது.

சென்ற புதன்கிழமை அரசாங்கசபை விவாதத்தில் ஒருபெரிய அரசியற் பிரச்னையில் மந்திரிகள் முதன்முதலாகத் தோல்வியடைந்தனர். நம் நாட்டிலும் உண்மையான பார்லிமென்டரிமுறை அரசாங்கம் இருக்குமானால் மந்திரிகள் உடனே பதவியை விட்டுப் போயிருந்திருப்பார்கள்.

சட்டக் காரியதரிசிப் பிரச்சினையை ஒரு முதல்தரமான நெருக்கடியாகச் செய்தவர் மந்திரிகளே ஆவர். ஆதியில் அட்டர்னி ஜெனரல் இதுவிஷயமாக மந்திரிகளைக் கேட்டபோது எங்களிடம் கேட்க வேண்டாம், அரசாங்கசபையிற் கேட்டுக்கொள்ளுங்கள்" என்று கூறினார்களாம். மந்திரிகள் சட்டக் காரியதரிசி வேண்டாம் என்று உண்மையாக அபிப்பிராயப்பட்டால் இப்படி ஏன் மதின்மேற் பூனைகள்போல் உட்கார்ந்து கொண்டு அரசாங்கசபைமீது பொறுப்பைப் போடவேண்டும்?

இதற்கு இரண்டு சமாதானங்கள் இருக்கின்றன. ஒன்று சட்டக் காரியதரிசிப் பிரச்னை அரசாங்க சபையில் நிச்சயமாக அடிபட்டுப் போகும் என்று மந்திரிகள் தீர்க்கமாக நம்பியிருக்கலாம். அல்லது "சட்டக்காரியதரிசி எங்களுக்கு வேண்டாம்" என்று அட்டர்னி ஜெனரலிடத்தில் நேருக்குநேர் சொல்ல இஷ்டமில்லாமலோ பொறுப்பை அரசாங்கசபைமீது சுமத்தியிருக்கலாம்.

எது எப்படி யிருந்தபோதிலும் மந்திரிமார்கள் சட்டக்காரியதரிசி நியமனத்தை எதிர்க்கத் தீர்மானித்திருந்தார்கள். தீர்மானித்துவிட்டு மௌனமாக இருந்துவிட்டார்கள். அட்டர்னி ஜெனரல் திரு இலங்கக்கூன் திரைக்குப்பின்னால் மிகச் சிரமப்பட்டு உழைத்துப் பிரசாரம் செய்து தமது கட்சிக்குப் பலம் சேர்த்துக்கொண்டார். இதன் விளைவைத்தான் புதன்கிழமை அரசாங்கசபையிற் கண்டோம். மந்திரிமார்கள் நுட்பமான அரசியற்கொள்கைகளைக் கிளறிக்கொண்டு மூச்சுத் திணறும்படி பேசிக்கொண்டிருக்கையில், திரு. இலங்கக்கூன் மௌனமாகவே உட்கார்ந்திருந்துவிட்டுக் கடைசியில் 10வாக்குகள் அதிகப்படியாகப் பெற்றுத் தமது காரியத்தைச் சாதித்துக்கொண்டார்.

ஆகவே மந்திரிமார்கள் முக்கியமான அரசியற் பிரச்னையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் தோல்வியடைந்தனர். ஆனால் அவர்கள் பிரமாதமாக ஒன்றுமே நடந்தது போன்றில்லாமல் முகத்தை வைத்துக்கொண்டார்கள். அம்மட்டோடு நில்லாமல் தாங்கள் எதிர்த்த சட்டக் காரியதரிசிக்கு வரவு செலவுத் திட்டத்தில் செலவும் சேர்த்துவிட்டார்கள். இந்தப் பெரிய நெருக்கடியை இவ்விதம் சாதுகதி செய்து பூசி மெழுகி விட்டார்கள்.

மந்திரிமார்கள் சட்டக் காரியதரிசி நியமனத்தை எதிர்ப்பது உண்மையானால், வரவு செலவுத் திட்டத்தில் சட்டக் காரியதரிசியின் செலவுகளைச் சேர்த்திருக்கக்கூடாது. மந்திரிகள் தங்கள் தோல்விக்குப்பிறகு பதவி வகிக்க நியாயமிருக்கிறதென்று காட்ட இந்த ஒரு வழிதானிருக்கிறது. அப்பொழுது என்ன ஆகும்? கவர்னர் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை ஒருபுறமிருக்க, சட்டக்காரியதரிசி நியமனத்தை அநுமதித்த அரசாங்கசபை அதற்கு வேண்டிய செலவுகளையும் சேர்க்கும்படி கேட்டுக்கொண்டு வரவு செலவுத் திட்டத்தைத்திருப்பி அனுப்பலாம்.

உடனே அரசாங்கசபையைக் கலைத்துவிட்டு இந்தப் பிரச்னையில் தேசத்தின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ள மறு பொதுத்தேர்தல் ஏற்பாடு செய்திருக்கலாம். சட்டக் காரியதரிசி நியமனத்தை ஆதரித்த 31 பிரதிநிதிகள் கனவான்கள் எத்தனைபேர் மறு பொதுத் தேர்தலுக்குத் தயாராக இருக்கிறார்களென்று வெட்ட வெளிச்சமாய்விடும். கவர்னர் விசேஷ அதிகாரத்தைப் பிரயோகிப்பாரென்று பயப்படவேண்டியதில்லை. 31 பிரதிநிதிகள் கனவான்களோடு கை கோர்த்துக்கொண்டு "என் மந்திரிகள்" என்று கூறிக்கொண்ட எவரையும் எதிர்க்கக் கவர்னர் இசைய மாட்டார்.

ஆனால் மந்திரிகள் இந்த நியாயமான முறையை விட்டுச் சமாதானக்கொடியைப் பறக்கவிட்டார். சற்றும் துணிவு என்பதே இல்லாமல் தங்களுடைய செல்வக் கூட்டுப்பொறுப்பைக் கீழே போட்டுச் சாஷ்டாங்கம் புகுந்து விட்டார்கள்.

மந்திரிமார்களுடன் 14 அங்கத்தவர்கள் சட்டக்காரியதரிசி நியமனத்தை எதிர்த்து வாக்களித்தனர். இவர்கள் இப்பொழுது மந்திரிமார்களைக் "கோழைகள்" என்று கூறினால், அதில் நியாயமிருக்கிறது. ஆனால் இந்தப்பதம் அரசாங்கசபையில் மந்திரிகளைக் குறிக்க உபயோகப்படுத்தப் படுமென்று நாம் எதிர்பார்க்கமாட்டோம்.

எனினும், சென்ற வெள்ளிக்கிழமை ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு பண்டாரநாயகாவுக்கும் நுவரெலியா, அவிசாவெலை அங்கத்தினர்களுக்கும் "வாய்ச்சண்டை" நடந்தபோழுது இந்தப் பதம் உபயோகிக்கப்பட்டது. உபயோகித்தவர் திரு. பண்டாரநாயகா அன்று. திரு பண்டாரநாயகா காதில் இது விழவில்லை. விழுந்திருந்தால் அன்று இன்னும் பலத்த அமளி ஏற்பட்டிருக்கும்.

சபைத்தலைவர் திரு: துரைசாமி இந்த அமளியிற் சமயோசிதமாக நடந்துகொண்டார். உடனே அவர் தமது ஆசனத்தை விட்டெழுந்துவிட்டார். தலைவர் ஆசனத்தைவிட்டெழுந்தால் அங்கத்தினர்கள் யாவரும் தத்தம் ஆசனங்களில் உட்கார்ந்துவிட வேண்டும். அவருடைய சமயோசிதமான செய்கை நேரவிருந்த ஒரு நெருக்கடியான நிலைமையைத் தவிர்த்துவிட்டது.

# 71 மணி நேரம் நீந்தியவர்

## கல்கத்தா நகரசபை நிர்வாக அதிகாரியின் பாராட்டு

கல்கத்தா ஜூலை 26—

கையில் விலங்கிட்டுக் கொண்டு திரு. பி. கே. கோஸ் காலநிலை மோசமாக விருந்தும் 71 மணி 8 நிமிட நேரம்வரை நீந்தினர். இந்த ஜூலை மாதம் 6ம் தேதி லாகூரில் திரு ராபின் சாட்டர்ஜி 63 மணி நேரம் நீந்தியதை இவர்தோற்கடித்துவிட்டார்.

கல்கத்தா மேயர், நகரசபை நிர்வாக அதிகாரி முதலிய பல பிரமுகர்கள் முன்னிலையில் ஜூலை மாதம் 21ந் தேதி காலை 7–12 மணிக்கு திரு. கோஸ் கார்ன்வாலிஸ் சவுக்கக் குளத்தில் இறங்கினர். மத்திய நீச்சல் கிளப்பின் ஆதரவில் அவருடைய நீச்சல் போட்டி நடந்தது. நேற்று இரவு 10–12 மணிக்கு திரு கோஸ் 63 மணி நேரம் நீந்தியிருந்தார். அப்பொழுது கல்கத்தா நகரசபை நிர்வாக அதிகாரி அவருக்கு மாலை சூட்டி அவரைப் பாராட்டிப் பேசினர். அப்பொழுது ஓர் பெரிய ஜனக்கூட்டம் அங்கு கூடியிருந்து சந்தோஷ ஆரவாரம் செய்தது.

# ஸ்பானிய தேச உள்நாட்டு யுத்தம்

## ஜிபுரேல்ற்றருக் கணித்தாகக் கடுமையான யுத்தம்!

### கலகக்காருக்கு வெற்றி!!

27-7-36

லாலினியா என்னுமிடத்தில் அரசினர் படையும் கலகக்காரரும் எதிர்த்துச் சமர் செய்த சமயத்தில் பன்னிரண்டுக்கதிகமான சேனுவீரரைக் கொண்ட அரசினர் படையைக் கலகக்காரர் நாசமாக்கினர். கலகக்காரருள் 60பேர் வரையில் மாண்டனர். சிறை பிடிக்கப்பட்டோருட் பலர் கொல்லப்பட்டனராம்.

பிரான்ஸியரின் வரவைத் தடுக்கும்படி ஸ்பானிய கடற்படை தஞ்ஜீரிலிருந்து எஸ்ரிப்போறு என்னுந் துறைக்குச் செல்லுகின்றது.

எஸ்ரிப்போறுவில் நடந்த யுத்தத்தில் அரசினர் சைநியத்துள் 600 பேர் வரையில்மாண்டனர்.1200 பேர்காயமடைந்தனர்.

ஜர்மனிய குறியீஸர்க் கப்பல் ஒன்றும் மூன்று "தோப்பிடோ" வள்ளங்களும் ஸ்பானிய நாட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டன.

# திரேசம்மாவைக் கடத்திச் சென்றதாக வழக்கு

( 3ம் பக்கத் தொடர்ச்சி )

சென்றோம். 3ம் எதிரி கார் கொஞ் சத்தூரம் சென்றதும் வந்து ஏறினர். காலைப் பாண்டியன்தாழ்வுக்கு ஆறு முகம் வீட்டுக்கு ஓட்டச்சொல்லி டிறைவரிடம் சொன்னர்கள். காரில் எனக்குஇரண்டுபக்கத்திலும் மரியை யும் சின்னத்துரையும் இருந்தார்கள். மற்றையவர்கள் டிறைவருடன் இருந் தார்கள். நான் 3ம் எதிரியைக் கண்டிருக்கிறேன். பொன்னுவே காரை ஓட்டினர். நான் அந்த நேரத்திற் சத்தமிடவில்லை. ஏனெனில் எனது சத்தத்தைக்கேட்டு மற்றவர்கள் வந்து கூடிவிடுவார்களென்று தெரியும் அல்லாமலும் எதிரிகளும் என்னைச் சத்தம்போட விடவில்லை. எனக்கு ஆறுமுகத்தையாகுதல் பண்டியனைத் தாழ்வையாகுதல் முன்தெரியாது ஆறுமுகம் வீட்டில் மரியையும் நானும் நின்றோம். மற்றையவர்களெல்லாரும் போய் விட்டார்கள் அங்கே நாங்களிருவருமாக ஓர் அறையில் நித்திரைசெய்தோம் மறுநாட் காலை பொன்னு காரைக் கொண்டுவந்தான். ஆறுமுகம் வீட்டில் இருக்கும்போது நான் ஒருவருக்கும் இதைப்பற்றி முறையிடவில்லை. ஆனல், நெடுக அழுதுகொண்டேயிருந்தேன்; காரில் நானும் மரியையும் ஏறி மரியை வீட்டுக்கு வந்தோம். நாங்கள் இறங்கும்போது ரோசை மரியை அங்கு வந்தாள். நான் ஏன் என்னை இப்படிக் கொண்டுதிரிகிறீர்கள் என்று கேட்டேன். அப்போது அவள் என்னை 3ம் எதிரிக்கு விவாகஞ் செய்துகொடுக்கப் போவதாகச் சொன்னள்.

நீதியாசர்:- நீ பொலிஸ்கோட்டில் உன்னையும் 3ம் எதிரியையும் ஆறுமுகத்தினுடைய இல்லத்தில் ஓர் அறையில் விட்டதாயும் மறுநாள் 3ம் எதிரியின் அடுத்த இல்லத்திற்குச் சென்றதாயும் கூறினுயா?

—நான் அப்படிக் கூறவில்லை

நீதியாசர்:- இன்னேர் இடத்தில் 3ம் எதிரி உன்னிடம் ஒன்றும் பேசவில்லை என்றும் ஒன்றும் செய்யவில்லை யென்றும் கூறினுயா?

—நான் சொல்லவில்லை

நீதி:- 4ம் எதிரி உன்னை 3ம் எதிரியை விவாகம் செய்துகொள்ளச் சொல்லியும் நீயே உனது எண்ணத்தின்படி சென்றதாயும் கூறினுயா?—ஆம்

நீதி:- உனக்கு அப்படிச் சொல்லச் சொன்னபடியால் நீ அப்படிச் சொன்னுயல்லவா?—ஆம்

நீ:- 3ம் எதிரியும் உன்னுடன் ஆறுமுகமும் வீட்டுக்கு வந்தவரா?—ஆம்

நீ:- அவன் உன்னுடன் கூட அறையில் படுத்திருந்தவனு?—இல்லை

மறுநாள் 3 ம் எதிரிகாருடன் ஆறுமுகத்தின் இல்லத்துக்கு வரவில்லை. கார் சென்று பாக்கியநாதனின் இல்லத்தின் படலையில் நின்றது. என்னைப் பாக்கிய நாதன் வளவுக்கு அடுத்த இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர். இதற்குமுன் 3ம் எதிரியை நான் அங்கு காணவில்லை, அவர் என்னுடன் பேசவுமில்லை.

குறுக்கு விசாரணையின் போது சாக்ஷி கூறியதாவது:-

த:- உன்னுடையமாமன் சந்தியாவின் மனைவிக்கு வலி வருவதுண்டா?—எனக்குத் தெரியாது

த:- நீ அங்கே 8 வருஷம் வசித்திருக்கிறுய் இதைக் காணவில்லையா?—எனக்குத் தெரியாது

த:- சந்தியா தனது மனைவிக்கு வலி வருகிறதாகக் கூறியிருக்கிறுரா?—எனக்குத் தெரியாது

த:- அவள் ஒரு வருத்தக்காறி, ஆகையால் நீ அவளைப் பார்க்கச் சென்றிருந்தாயல்லவா?— ஆம். நான் அவளைப் பார்க்கச் சென்றிருந்தேன்

த:- நீ மாமியைப் பாதுகாக்கச் சென்றுாய?— ஆம்

த:- உனக்கு ஒரு தங்கைச்சி உண்டல்லவா?—ஆம்

த:- அவளுக்கு வயசு 11?—ஆம்

த:- அவள் கறுப்பி?—ஆம்

த:- அவள் உன்னைப் பார்க்க வருவதுண்டு?—ஆம்

த:- கடற்கரை உங்கள் இல்லத்திற்குக்கிட்ட அல்லவா?

சா:- ஆம்.

த:- அங்கேதான் 3ம் எதிரி வலை போடுகிறவன்.

சா:- ஆம்.

த:- அவன் நல்லமீன்கள் பிடிப்பதில் கெட்டிக்காரனல்லவா?

சா:- எனக்குத்தெரியாது

த:- நீ அவன் கடற்கரைக்குச் செல்வதைக் கண்டிருக்கிறுயல்லவா?

சா:- இல்லை.

த:- வேறும் ஆட்களும் வருகிறபடியால் அவனை உன்னுல் காண முடியாமலிருந்ததல்லவா.

சா:- நான் இல்லத்தைவிட்டு வெளிக்கிடுகிறதில்லை.

த:- உன்னுடைய சகோதரி மூலம் 3ம் எதிரி கதைகள்சொல்லி அனுப்புகிறதாக உனது சகோதரி வந்து சொன்னுல் அது சரியல்லவா?

சா:- இல்லை. அப்படி நடக்கிறதில்லை

த:- நீ விவாகம் செய்யும்பக்குவம் அடைந்துவிட்டாயல்லவா?

சா:- ஆம்.

த:- இனி உனது தகப்பனர் சொல்லியவற்றிற் கேட்கிறேன்.

த:- உன்னைச் சுவக்கினுக்கு விவாகம் பேசியதல்லவா?

சா:- ஆம்.

த:- நல்ல பிள்ளையைப்போல் நடந்தாயானுல் கெதியில் விவாகம் நடந்துவிடும். ஆகையால் நீ 3ம் எதிரியை முடிக்க விரும்புகிறுயா?

சா—இல்லை.

த:- உனது தகப்பனர் பாக்கியநாதனைப் பேசினபோது நீ மறுத்துவிட்டாயல்லாவா?

சா—ஆம்

த:- 3ம் எதிரி கறுவல்; அல்லாமலும் கட்டையனல்வா?

சா—பதிலில்லை

த: நீ பொலிஸ்கோட்டில் சொல்லியவற்றிற் கேட்கிறேன்:-

நீ வெளிக்கிடும்போது உனது உடுப்பை மாற்றிக்கொள்ள விலையா?

சா—இல்லை

த:- நீ வெளியே போகிறபடியால் அடுத்த இல்லத்தாரிடம் உனது இல்லத்தைப் பார்க்கச் சொல்லவில்லையா?

சா—இல்லை

த:- நீ போனபோது இல்லம் தன்னைத்தானே பார்த்துக்கொள்ளுமென்று நினைத்து நீ 3ம் எதிரி பாக்கியநாதனைத் தேடத் தொடங்கினுயல்லவா?

சா—இல்லை

த:- மறுநாட்காலை நீ பொலிசாருக்குச் சொல்லிய வாக்குமூலம் சரியன்று

சா—ஆம்

முழுவாக்கு மூலமும் வாசித்துக் கேட்டபோது அனேகமான கேள்விகட்கெல்லாம் சாட்சி இல்லை யென்றே பதில் அளித்தாள்

த:- இனிப்பொலிஸ் நீதிபதிக்குக் கூறியவற்றிற் கேட்கிறேன்

நீ ஏன் இப்படி மாற்றி மாற்றிக் கூறினுய்?—அவர்கள் சமாதான ஒழுங்குகள் செய்கிற தாகச் சொன்னுர்கள்; ஆகையால் மாற்றிச் சொல்லச் சொன்னுர்கள்

த:- நீ ஆறுமுகத்தின் நிருகத்தில் ஆறுமுகத்தை உதவிகேட்டாயா?—இல்லை

த:- உனக்கு நகரசங்கத் தெரிவில் ஜேக்கப்புக்கும் அன்ரனிக்கும் இடையே போட்டி நடந்தது தெரியுமா?—எனக்குத்தெரியாது

## அரசாங்க வரவு செலவு

நகல் திட்ட விபரம்

கொழும்பு ஜூலை 27

அடுத்தவருட அரசினர் வரவுசெலவுத் திட்டத்தை ஆகஸ்டுமாதம் 4ம் தேதியன்று சபை முதல்வர் சர் பரன் செயதிலகா சமர்ப்பிப்பார். அத்திட்டம் சம்பந்தமான மான்யங்கள் வெள்ளிக்கிழமை இரவு வெளியான கெஜட்டில் பிரசுரமாயிருக்கின்றன. அதன்படி அடுத்த நிதி வருடத்தின் மொத்தச் செலவு 119,7222673 என்றும் நடைமுறை நிதிவருடச் செலவை விட அது ஏறக்குறைய ஒருகோடி ருபாய் அதிகமானது என்றும் தெரியவருகிறது. மின்சார இலாகா மான்யங்கள் மேற்படி நகல் திட்டத்தில் காணப்படவில்லை. கரும்பூத இலாகாவுக்கு [றெயில்வே] மாத்திரம் 5,703,000 ருபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

## சாராயக்கணக்கில் 10355 ரூபா மேலதிகம்

திருக்கோணமலையில் மூன்று சாராயத் தவறணைகள் இந்த ஆண்டிற் குத்தகை விலைப்பட்டது. மாரிமுத்து நாடார் என்பவர்தானும் மூன்று தவறணைகளையும் குத்தகைக்கு வாங்கியவர். சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு விற்பனையில் குறித்த மூன்று தவறணைகள்மூலம் மேலதிகமாக வந்த பணம் 10355 ரூபாவாகும்.

## அமெரிக்காவில் உஷ்ணம் குறைவு

நியூயார்க், ஜூலை 15—

தற்போது அமெரிக்காவில் உஷ்ணம் குறைந்து வருகிறது. ஜனங்கள் பன்னிரண்டு தினங்களாக இருந்து வந்த உஷ்ணத்தின் கொடுமையைப்பற்றிக் கணக்குப்பார்த்தனர். 2000பேர்கள் மரணமடைந்துவிட்டனர். 1,000,000 டாலர் மதிப் புள்ள பயிர்கள் சேதமடைந்துள்ளது.

த:- அவ் விடத்தார் ஜேக்கப்தான் வரவேண்டுமென்று நின்றது தெரியுமா?—ஆம

த.- சந்தியாவும் மனைவியும் ஜேக்கப்புவுக்காக வேலை செய்தவர்களல்லவா?—ஆம்

த:- எதிரி சின்னத்துரையும் மற்றவர்களும் அன்ரனிக்காக வேலை செய்தவர்களல்லவா?

சா—ஆம்

த:- சின்னதுரைக்கு அவ்விடத்தில் நடப்புண்டல்லவா?

சா—ஆம்

த:- அவருக்கு ஒரு கல்வீடு உண்டு அல்லாமலும் அவர் ஓர் சங்கீத வித்துவானல்லவா?

சா—ஆம்

த:- அவர் அநேக வாக்காளர்களைத் தனது பக்கமாக்கினுரல்லவா?

சா—எனக்குத் தெரியாது

த:- நீ ஜேக்கப்புடன் இருக்கும் காலங்களில் அவர் தான் தோற்றது சின்னத்துரையால்தான் என்று உனக்குச் சொல்லவில்லையா?

சா—இல்லை

த:- உன்னுடைய தாயார் சின்னத்தம்பியினுடைய வைப்பாட்டி மகள்

சா—ஆம்

த:- உன்னை அவர் நல்லாய் நடத்தினுரல்லவா?—ஆம்

த:- அவர் விவாகஞ் செய்யாதவர்?—ஆம்

த:- அவரும் தாயாரும் (ஓர் கிழவி) தான் அவருடைய இல்லத்தில் உண்டு—இல்லை; இரண்டு சகோதரிகளும இருக்கிறுர்கள்.

த:- இதன்பிற்பாடு தான் உன்னை மடத்துக்கு அனுப்பினுர்கள்?—ஆம்.

த:- உனது தகப்பனுக்கு உன்னை 3ம் எதிரிக்கு விவாகம் செய்துகொடுக்கச் சம்மதமா?

சா:- ஆம்.

த:. உனக்கு அவனை விவாகம் செய்துகொள்ளச் சம்மதமா?

சா:- இல்லை

இதன்பின் டிறைவர் பொன்னு ஆறுமுகம், செல்லத்துரை, சந்தியாகு, இசைாயக்கா முதலியவர்கள் சாட்சியம் கூறினர்.

தொடர்ச்சி 5ம் பக்கம்

# மனைவியை விபசாரஞ் செய்ய வற்புறுத்தினுன்

## எதிரிக்கு 1 வருடக் கடுங்காவல்

பம்பாய், ஜூலை 8

சையத் ஹமீத் சையத் மோஹிதீன் என்ற பேர்வழிக்கு மூன்றுவது கோர்ட் மாகாண மாஜிஸ்திரேட் ஒருவருஷம் கடுங்காவல் தண்டனை விதித்தார். மேலும் 50 ருபா அபராதம் தரவேண்டுமென்றும் அபராதம் செலுத்தத் தவறினுல் 3 மாதம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பில் கூறினுர்.

சையத்ஹமீத் சையத் மோகிதீன் என்ற எதிரி தன் மனைவியை விபசாரத்துக்கு விட்டு அந்தக் காசினுல் ஜீவித்து வந்தானென்பது குற்றச் சாட்டு.

எதிரி தன் மனைவியை விபசாரத்துக்கு உட்படும்படி பலவந்தஞ் செய்தானும், வாடிக்கைக்காரர்களைக் கொணர்ந்து கூட்டிக் கொடுத்தானும். ஜூன் 18-ந் தேதியன்று பொலிசார் ஒரு பொலிக்காமுகனை அந்த விலாசத்துக்கு அனுப்பினர். அந்தக் காமுகன் பெண்ணின்கணவனைச் சந்தித்து பேரம் பேசினுன். விபசாரத்துக்கு ஏற்பாடாகிவிட்டது.

பொலிசார் குறிப்பிட்ட நாணயங்களை அனுப்பியிருந்தனர். அந்த நாணயங்கள் எதிரியிடமிருந்து பின்னர்க் கைப்பற்றப் பட்டன.

எதிரியின்மனைவி கோர்ட்டில் அவளது பரிதாப வாழ்க்கையின் விவரங்களைக் கூறி அழுதாள்.

எதிரியின் நடத்தையை மாஜிஸ்திரேட் பலமாகக் கண்டித்தார். அந்த ஆசாமியின் கெட்டநடத்தைக்குப் பலமான தண்டனையே தகுதி என்று கூறினுர். இந்த மாதிரி ஆட்களுக்கு ஜெயில்தான் சரியான வாசஸ்தலம் என்று கூறினுர்.

## உலகம் பலவிதம்.

கல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் திருவிழாத் தொடங்கி இன்றோடு எட்டுநாளாயின. எங்கே பார்த்தாலுஞ் சைவமணம்; யாரைப் பார்த்தாலுஞ் சிவசின்னங்களுடன் காணப்படுகின்றனர்; உற்சவகாலத்து விரதங் காக்காதவர் சிலரினுஞ் சிலரெனலாம். குளித்து முழுகி ஆசாரசீலராய் அல்லும் பகலும் கல்லைக் கந்தனிடம் போவார் வருவாரை எங்குங் காணலாம். மதுபானிகள் சாராயங் கள்ளைவிட்டனர். புலால் புசிப்போர் மற்சமாமிசத்தை மறந்தனர். சனி புதன்தோறும் தவறுமல் எண்ணெயிட்டு முழுகுவோர் 26 நாட்களுக்கு அதனைச் செய்யப்போவதில்லை. தாய்ப் பசுவை நோக்கி ஆவலுடன் ஓடிச் செல்லும் கன்றினைப்போல, கந்தையன் தலத்திற்குக் காலையும் மாலையும் நண்பகலும் கள்ளிரவுஞ் செல்வார் பன்னூற்றுக் கணக்கானேர். சென்றவுடனே வாக்கிலே தோத்திரங்கள் எழ, கண்களில் நீர் பெருக, ரோமஞ் சிலிர்ப்ப, காத்தடுமாற மனமுருக முருகன் திருக்கோயிலை மும்முறை வலம் வருவார் பலர்; அறுமுறை அங்கப்பிரதக்கணஞ் செய்வார் வேறுபலர். இந்த அரிய வணக்கத்தைச் செய்யும் விஷயத்திலே விருத்தர் பாலர் சிறியார் பெரியார் தாழ்ந்தவர் உயர்ந்தோர் செல்வர் வறியவர் கற்றுர் கல்லாதார் நல்லார் பொல்லார் என்ற பாகுபாடு எள்ளளவும் இல்லை. அறுமுகன் சந்நிதியில் எவரும ஒருமுகமாகவே மதிக்கப்படுகின்றனர்.

*   *   *

மேலே சொன்னவை அத்தனையும் ஆண்களைப் பற்றியன. இனி இந்த உற்சவகாலத்திற் சைவமகளிர் செயல் எப்படியென்பதைப் பார்ப்போம். கந்தன் மகோற்சவத்தில் அதிக ஆர்வமுடையவர்கள், இது எப்போது வரும் என்று ஆவலுடன் காத்திருப்பவர்கள் எதிர் பார்த்திருப்பவர்கள் இன்னன சைவமகளிரேயாவர். நல்லூர்க்கந்தசுவாமி கோவிலிற் கொடியேற்றஞ் சமீபிக்கின்றதென்னவே, ஆண்களுக்குக் கவலையும் மகிழ்ச்சியும் உண்டாக, பெண்களிடத்துத் தனியே மகிழ்ச்சிமாத்திரங் காணப்படும். தம கணவன் வாங்கியீடுவைத்த ஆபரணம் மீட்கப்படுதற்கும் பழுதற்ற பூணாரம் திருத்திப் பழக்கச் சுடுவதற்கும் இந்தத் திருவிழாவைப் போல் ஏற்ற காலம் வாய்த்தல் அரிதல்லவா? விலையுயர்ந்த புதிய சேலை துணிகளைவாங்குவித்தற்குத் நிபாவலிக்கு அடுக்க வாய்த்த காலம் இதுவல்லவா? தன் கணவன் இல்லானுயிருந்தாலும் இல்லான் அவனைக் கொண்டு இவைகளைச் சம்பாதிப்பித்தற்கு ஒருபோதும் பின்னில்லாள்; திருவிழாத் தொடங்குமுன் வீடுதோறும எவ்வளவு மனஸ்தாபம், எத்தனை வாடல் எவ்வளவு புறங்கூறல், எத்தனை சண்டை, எத்தனை தேற்றரவு, எவ்வளவு சமாதானம், இன்னும் எத்தனை இரப்பு, மேலும் எத்தனை பணிவு கணவனுக்கும் மனைவிக்குமிடையே நிகழ்கின்றன! இவைகளெல்லாம் எங்கள் நல்லூர்ப் பெருமானுடைய திருவிளையாடல்களல்லவா!

*   *   *

போன வெள்ளிக்கிழமை (24-7-36) மத்தியானத்தின்மேல்எவரைக்கண்டாலும்கொட்டடிப்பக்கத்தைநோக்கிச் செல்பவராகவே காணப்பட்டனர். "மஞ்சம்புறப்பட்டுவிட்டதா? எங்கே நிற்கிறது?" என்ற கேள்விகளைப் போவோர்கேட்க, வருவோர் "ஓம் புறப்பட்டு விட்டது பெரிய கடைச்சந்தியில் நிற்கிறது" என்று பதில் சொல்வதற்கிடையில், கேட்டவர் ஒரு கூப்பிடுதூரம் அவசரமாகப் போய்விடுவார். மஞ்சம் வருமெனக் காத்திருந்த வீதிகளின் இருமருங்கும் நிரையே ஆயிரக்கணக்கானேர் அதன் வரவை ஆவலுடன்எதிர்பார்த்துநின்றனர். இப்படி நின்றோருட் பெரும்பான்மையினர் பெண்களும் சிறுமியருமேயாவர். காத்துநின்றவர் எவ்வளவு சீக்கிரத்தில் மஞ்சம் வரல் வேண்டுமென்று ஆவலுடன் விரும்பினர்களோ, அந்த அழகிய மஞ்சம் அவர்கள் எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக மிகவும் காலதாமசமாகவே வரலாயிற்று. ஓடியும் நடந்தும் வேணவாவுடன் சென்றவர்கள தெருவீதியில் மஞ்சத்தைக் கண்டார்கள்; அற்புதங்கொண்டார்கள்! இந்தமஞ்சம் எந்தை கந்தன் ஏறுவதற்குத்தகும்! தகும்! என்றுசொல்லி மனமகிழ்ண்டார்கள்; கலியுகவரதன் அந்த மஞ்சத்தின்கண் அருவத்திருமேனியுடன் எழுந்தருளியுள்ளான் என்று மதித்தார்கள்; மதித்த மாத்திரத்தே தம் கரங்கள் சிரத்தில் ஏற அம் மஞ்சத்தைக் கும்பிட்டார்கள். இதனை மீட்டு மீட்டு நூறுமுறை பார்த்தாலும் கண்கள் அலுப்படையா என்றுர்கள். இவ்வியமஞ்சத்தைச் செய்வித்த முகாந்தரம் வடம் பிடித்துச் செல்வதையும், செய்த ஆசாரி மஞ்சத்தின் ஒருபுறத்து ஒதுங்கி நிற்பதையும் கண்டார்கள். இதனைச் செய்த ஆசாரி யார்? செய்வித்த சீமான் எவர்? என்று ஒருவர் மெல்ல வினவ, அங்கு நின்றோரத்தனை பேரும் அந்த இருவரையும் அற்புதத்துடன் சுட்டிக் காட்டினுர்கள்.

*   *   *

தொடர்ச்சி 5ம் பக்கம்

## மாதர் வெறுப்புச் சங்கம்

அமெரிக்காவில் சால்ட்லேக்சிட்டி யென்னும் ஊரில் பதினறு இளைஞர்கள் சேர்ந்து 1901 ம் ஆண்டில் மாதரை வெறுப்போர்சங்கம் ஒன்று ஏற்படுத்தினுர்கள். அவர்களில் பத்துப் பேர் இன்று இல்லத்தார்களாய் விட்டார்கள்!

## கிழவிக்குப் பல் முளைக்கிறது.

ஹங்கேரி நாட்டில் பாஜா என்ற கிராமத்தில் அலெக்சாந்தர் ட்ரேக் என்ற 76 வயதுக் கிழவிக்குப் பல் வலி ஏற்பட்டது. அவள் வைத்தியரிடம் காட்டியதில் அப்பொழுது அவளுக்குச் சில புதியபற்கள் முளைப்பது தெரியவந்தது.

# குற்றங்கள் அதிகரிப்பதற்கு நியாயமென்ன?

யாழ்ப்பாணத்திலே வரவரக் குற்றங்கள் மேலும் மேலும் அதிகரித்துவருகின்றன. கொலைகள், கத்திக்குத்துகள், சண்டைகள், வீண் அபாரமான வார்த்தைகள்பேசுதல், முதலியனவே தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன. தினசரிப பத்திரிகைகளை ஒருவன் படிப்பானேல் ஒவ்வொருநாளும் அப்பத்திரிகைகளில் மேற்குறிக்கப்பட்டவற்றைப் பற்றிய புதினங்கள் மலிந்து பொலிந்து இருப்பதைக் காண்பான். இவற்றிற்கெல்லாம் காரணம் யாதென்பதை நன்காராய்ந்து, பார்த்து இக்குற்றங்களைத் தவிர்ப்பதற்கேற்ற வழிவகைகளை நாம் தேடவேண்டும். மதுபானம் அருந்துதல், ஆசாரம், ஒழுக்கம், அன்பு முதலியன குன்றியமை, கடவுட்பக்தி யின்மை, சைவாபிமானமின்மை, நல்லொழுக்கமின்மை, உலோகாயதம் அதிகரித்தமை, பதிநேச்சயமின்மை, முதலியனவே குற்றங்கள் செய்வதற்கு மூலகாரணங்களாகக் காணப்படுகின்றன. முதலாவதாக நாம மதுபானம் அருந்துதலை எடுத்துக்கொள்வோம். யாழ்ப்பாணத்தில் நடக்கும் கொலைகளுக்கும் கத்திக்குத்துகளுக்கும் உடன் காரணங்கள் யாவை? மதுபானம் என்றே எவரும் சந்தேகமின்றிக் கூறுவார்கள். மதுபானமருந்துபவர்களே மேற் கூறப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள். ஒருவனுக்கு இன்னொருவனிடம் கோபமிருந்தால் அக்கோபத்தைச் சாதிப்பதற்காக இன்னொருவனுக்கு மதுபானம் கொடுத்து அவனை எதிர் விரோதியை அடிக்க அல்லது கொல்லும்படியாகக் கூறுவான். ஆகையால் மதுபானத்தை எந்த, கல்வியறிவற்ற மனிதனுக் கொடுத்தால் அவன் வேண்டியவாறு நினைத்த எளிய கெட்ட செயல்களையும் செய்வான். இந்த அரிய காரியத்தைப் பாப்புதற்காகவே யாழ்ப்பாணத்தில்மரவரியையுண்டாக்கி அதனாலே அநேகருக்குக் குடிக்கிறதற்கேற்ற வசதிகளை அரசினர் செய்திருக்கிறார்கள். மரவரி அரசினர்க்கு நல்ல வருமானத்தைக் கொடுக்கிறதாயிருந்தாலும் சனங்களுக்கு எவ்வளவுகேட்டை விளைவிக்கிற தென்று கூறவேண்டும். குடியே எல்லாக் குற்றங்களுக்குங் காரணமென்பதை ஒருவரும் மறுக்க மாட்டார். மரவரியை வரச்செய்துவிட்டோம்; ஆனால் நாம் இனிச் செய்யவேண்டிய தொண்டு யாதெனில் பொது ஜனங்களுக்குக் குடிப்பதனால் வரும் கேடுகளை விளக்கப்படுத்த வேண்டும். பொது சனங்களுக்கு இவைகளைப்பற்றிக் காலத்துக்குக் காலம் விளங்கப்படுத்திவர, குடிப்பவர்களின் தொகை குறையும். இதனால் குற்றச்சாட்டுகளும் மிகக் குறைந்துவிடும். இதனால் நம் நாட்டில் சமாதான சீவியம் நிலவிவரும்.

பள்ளிக்கூடங்களில் குற்றங்கள் செய்வதினால் வரும் கேடுகளைப்பற்றி மாணவர்களுக்குப் பயிற்றப்பட வேண்டும். அப்படிப் பயிற்றுவதினாலே அவர்களுக்கு நாளுக்கு நாள் அறிவு அதிகரித்து அறயாமை நீங்கப் பெறுப. மதுபானம் பாவிப்பதினால் வரும கேடுகளைப்பற்றி மாணவர்கள் நன்றாய் அறிய வேண்டும்.

குற்றங்கள் செய்வதற்கு இன்னுமொரு காரணம் யாதெனில் பொருமையே. கொலை, கத்திக்குத்துகள முதலிய குற்றச் சாட்டுகள பொருமை காரணமாகப் பொதுவாக உண்டாகின்றன. மற்றவர்களுடைய செல்வம், பொருள், கல்வி, புகழ் முதலியவற்றைக் கண்டு பொருமை கொண்டு அதனால் அவர்களின விரோதத்தையுண்டாக்கி வருகின்றனர். விரோதம் பெலத்தவுடன சண்டைகளும் சச்சரவுகளும் உண்டாகும். மற்றவர்களைக் கண்டு பொருமைப்படுவதினால் வரும் கேடுகளைப்பற்றி மாணவர்களுக்கு நன்கு போதிக்கவேண்டும். கல்வி அறிவில்லாத பொது ஜனங்களுக்கும் பொருமை, மதுபானம முதலியவற்றின கேடுகளைப்பற்றிக் கிராமங்கள் தோறும் கல்வியறிவுளளவர்களாற்பிரசங்கங்கள் செய்யப்பட வேண்டும். இப்போது முதிர்ந்தவர்களிடம் இவற்றினால் ஏற்ற திருத்தம் காணப்படாவிட்டாலும் சில காலத்துள்ளாவது சிறுவர்கள கல்வி பயின்ற பிற்பாடு நல்ல சமாதான சீவியம் ஒரு கொஞ்சமாகுதல் ஏற்படும். ஆகையால் கிராமங்கள் தோறும் வசிக்கும் அறிஞர்கள் பாமர சனங்களுக்கு வாரத்துக்கு ஒரு முறை அல்லது மாதமிருமுறையாவது இவற்றைப் பற்றிப் போதிக்கவேண்டும அறிஞர்கள் போதிப்பதோடமையாது தங்களால் போதிக்கப்பட்டவற்றையெல்லாம சாதனைக்குக் கொண்டிடத்தினால் தான் பாமரசனங்களும் அவற்றைப் பார்த்து நல்லொழுக்கமுடையவர்களாக விளங்குவார்கள் நல்லொழுக்கம் மிகவும் குறுகிவருகின்றது. வாய் வேதாந்தம் பேசிச் சாதனையளவில் மிகவும் குறைந்தவர்களாகவே நம்மனோரில் அநேகர் காணப்படுகின்றனர். ஒவ்வொரு கிராமங்களில் வாழும் அறிஞர்கள் தமது கிராமத்துக்கு ஓர் தீபம்போல விளங்கவேண்டும். ஒழுக்கத்தை நாம் உயிரிலும் பார்க்கக் கருதவேண்டும். "ஒழுக்கம் விழுப்பந் தாலான் அது உயிரினும் ஓம்பப்படும்" என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார். இந்த நெறி கிராமங்கள் தோறும் பரவவேண்டும் கொலை முதலியவற்றிற்கு எல்லாவற்றிலும் முக்கிய காரணம் யாதெனில் சைவாசாரமின்மை, சமயாபிமானமின்மை நாமெல்லோரும் ஒரு பிதாவின் மக்கள் ஆகையால் நாம் அனைவரும் திருவருள் சம்பந்தப்பட்டு வாழவேண்டுமென்ற சிந்தனையின்மை முதலியனவே. வெறும வேடிக்கை முதலியவற்றில் நமது வாழ்நாள முழுவதையும் வீணாக்கிக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற பொய்யான நினைவே நம்முள்ளத்தில் தாண்டவமாடுகின்றது. வாண வேடிக்கை, அளவிறந்த விலைகளுள்ள சீலையணிதல், வாகன விருப்புதல், பெரிய வீடுகட்டுதல், மோட்டாரில் பிரயாணம் செய்தல் முதலியவற்றில் நமது மனதையும் பொருளையும் பாழாக்கி வெறும் ஆடம்பரமான சீவியத்திலும், பொய்த்தோற்றமுள்ள வேடிக்கைகளிலும் நமது உடல், பொருள், ஆவி முதலியவற்றைச் சிதைத்து வாழ்கின்றோம். வாழ்நாளின் பெரும்பேற்றை மனிதப் பிறவியின் கிடைதற்கரிய பயனைப் பேற்றிருந்தார் இன்று இல்லையெனனும பெரும உண்மையை நாம் அறியாததினாலன்றோ தற்காலத்தில் கொலை, சண்டைகள் மலிந்துகிடக்கின்றன. நமது உள்ளத்தில் அறிவு நிலவியிருந்தால், கடவுளின் திருவருள் ஊற்றெடுத்துப் பாய்ந்தால், அன்பு மயமாயிருந்தால் எங்ஙனம் நமது நாட்டில் சண்டைகள் நேரிடும். சைவசமய உணர்ச்சியை, கடவுள் உண்டென்னும் நிச்சயத்தை அவ் எம்முடைய பாவங்களையுங் கவனித்து நம் துன்பத்தைக் கெடுப்பார் என்னும பெருமுண்மையைச்சனங்கள் அறிந்தால, அவர்கள் கெட்ட செயல்களைச்செய்ய ஏவப்படார்கள். உண்மையில் இவற்றைச் சிந்திக்கு மொருவனிடத்தில் கெட்ட நினைவுகள் குடிகொள்ள மாட்டாது. கொலைகளவு முதலியவற்றை அறவே நீக்க ஒருவராலும் முடியாது. ஆனால் இவற்றைத் திருவருட் சம்மதத்துடன் குறைக்கலாம. மேல்நாட்டு நாகரீகத்தை நாமும் பின்பற்றி எங்களுடைய சுயாதீனம், கற்பனுசகதி, சமாதான சீவியம், உடை, நடை, பாவனை, சைவாசாரம் முதலியவற்றை இழந்து வீண் ஆடம்பர சீவியத்தில் ஈடுபட்டுக் கடன் முதலியவற்றில், தொடக்குண்டு அல்லனேரும் சமாதான சீவியத்தை இழந்தபடியால்தான் நமக்கு இவ்வளவு கெடுதி வருகின்றது கொலைகளும் இவற்றாலேயே உண்டாகின்றன. வேலையில்லாத் திண்டாட்டமும் இதற்கொரு காரணமாகக் காணப்படுகின்றது. வேலையில்லாமல் அநேகர் அலைந்து அதனால் அநேக விலங்கங்களுக்குள் அகப்பட்டுச் சண்டை முதலியவற்றையுண்டாக்குகிறார்கள். வேலையில்லாமலிருப்பவர்களுக்கு அரசினர் வேண்டிய தொழில் முறைகளைக் காட்டவேண்டும். சமாதான சீவியத்தை நாம் நம்மவர்களின் ஓங்கி வளரச்செய்யவேண்டும். "போதுமென்ற மனமே பொன்பெறும் மருந்து," "கெட்டவர்கூட்டம் விட்டிட விரும்பு" "நன்மை கடைப்பிடி" முதலிய அறிவு பொதிந்த மொழிகளைச் சனங்களுக்கு அறிவுறுத்தி அவற்றின் பொருளை விளங்கச்செப்பவேண்டும். முற்காலத்தே நம் புராணபடனஞ் செவ்வனே நடந்துவந்தது. அவ்வழக்கம் அதிகம் அருகிவருகின்றது. புராணக் கதைகளைச் சனங்கள் கேட்பதனால் சனங்களிடத்தில் மனச்சாந்தமும், பொறுமையும், பக்தியும், இன்னோரன்ன வேறு சில சீரிய குணங்களும் வளர்ந்துவரும். வளர்ந்துவரவே குற்றங்களும குறையும் ஆகையால் எல்லாவற்றிற்கும் அரிய மருந்தாகவிருப்பது சமய அறிவுமட்டுவட்டியானமுமே. இவற்றை நம் நம் நாட்டில் நன்கு வளரச்செய்ய வேண்டும். இவற்றைவளரச்செய்தால்தான் கொலைகளவு முதலியன ஒருவாறு குறைந்துவரும்.

"மேன்மை கொள்சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

உண்மைவிளம்பி.

## யாழ்ப்பாணத்திற் சம்ஸ்கிருதம்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

டிய திருத்தங்கள் செய்யப் பலர் முற்படுவர். முதலாவதான திருத்தம் தகுதி வாய்ந்த திருக்கோவில் தோறும் வேதாத்யயன பாடசாலை சம்ஸ்கிருதபாடசாலை என்பவற்றைத் தாபித்து நடாத்தும புராணபடனஞ் செய்வதுமாகும். இரண்டாவதாக நாட்டில் இப்போதுள்ள தமிழ்ப் பாடசாலைகள் தோறும் வித்தியாபகுதியாரின் அனுமதிபெற்றுச் சம்ஸ்கிருதபாஷையை இரண்டாம்பாஷையாகக் கற்பிக்க முயலுவதாகும். மூன்றாவதாக ஆங்கிலக்கல்லூரிகளில் உயர்தர பரீக்ஷைகளில் தோற்றும் மாணக்கர், லத்தீன் பாஷை கற்குமிடத்து அதனை விடுத்துச் சம்ஸ்கிருதத்தைக் கொள்ளுதலாகும். நாலவதாக, யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான கோவிலதிகாரிகள் யாவரும் ஒரோபித்து ஒருபர்தர சம்ஸ்கிருத கலாசாலையை நிறுவ வேண்டும.

### வண்ணார்பண்ணையிற் குருபூசை.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு செட்டித்தெருவி லிருக்கும் காலஞ் சென்ற பொன்னுக்கண்டுவின் ஸ்ரீமத் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசைமடத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (26.7-36) தாது௵ ஆடி மீ 11-ந் திகதியன்று மேற்படியாரின் மகன் சுந்தராம்பாளால் அம் மடத்தில் ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி நாயனார்குருபூசை, மகேஸ்வரபூசை பிராமணர்போசனம், அன்னதானம் ஆகியவை அதிவிமரிசையாக நடந்தேறியன. அன்று பிற்பகல் 6-30 மணியளவில் குப்பிளான் மகாஸ்ரீ ஸ்ரீ செல்லத்துரைப்பிள்ளை அவர்களால் "சுந்தரமூர்த்திநாயனார் சரித்திரம்" பிரசங்கம் செய்யப்பட்டது.

—கடித.

### பலஸ்ரயின் கலகம்

12 அராபியர் மாண்டனர்

யோதான் மலைப் பிரதேசத்தில் அராபியர் பிருத்தானிய சைனியத்தைத் தாக்கியவிடத்து, பிருத்தானியர் அவர்களுள் 12 அராபியரைச் சுட்டுக்கொன்றனர்.

### பட்டினத்திலே தீ

எரிட்டிரியாவிலுள்ள மாஸாவா என்னும் பட்டினம் நெருப்புச் சுவாலையுடன் எரிந்தபடி காணப்படுகின்றது. இதனால் இத்தலியருக்குரிய ஆகாயரதம் 50 வரையிற் சேதப்பட்டன.

## "வெண்பாவில் புகழேந்தி"

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

"சொல்லியகுறியினத்
தோன்றவேயவன்
அல்லனேனிறப்பனென்றகத்துள்
உன்னினான்"

எனச் சிறை நினைத்தாளாகவும் கூறினர்கள். புகழேந்தியார் "செம்மைசேர் கன்னிபாஞ்ஞசில்" என்ற சொற்றொடரால் பின்னைய இரு புலவர்களையும் வென்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

நமது புலவர் பூஞ்சோலைகளையும் அவற்றில் மாதர் செய்வனவற்றையும் நன்கு எடுத்துரைத்திருக்கின்றார்.

* பூக்கொய்கின்ற பெண்ணொருத்தியின் முகத்தைப் பங்கயமென்றெண்ணிப் படிந்த வண்டை அவள் தன்கையால் கலைக்க அவ்வண்டு அவள் கையைக் காந்தள்மலரென்று கருதி அதிற் பாய்ந்தது அவள் என் செய்வாள். அவ்வண்டைக் கலைக்க முயற்சித்துத் தான களைப்படைந்து வியர்வையுடன் நின்றாள்.

* கம்பரும் ஓரே நேரத்தில் மலராத தாமரையுங் குவளையும் ஒரு பெண்ணாகிய வல்லியில் முகமாகவும் கண்ணாகவும் பூத்திருப்பதைக் கண்ட புதுமையைப் பார்த்துத் திரியும் வண்டு அப்பெண் கலைத்தாலும் போகாது அப்புதுமையைப் பார்த்தது என அழகுறக் கூறியிருக்கிறார். இதில் அவர் ஒரு நேரத்தில் பூவாத இரு மலர்கள் மங்கை வல்லியில் பூத்தன எனக் கூறிய நயம் தமிழறிஞரை இன்பசாகரத்தமிழ்த்துத்தகை பது. நமது புகழேந்தியாரும் அவரிலும் குறைவுபடாமல் கையாற் கலைக்க அதனைக் காந்தளென எண்ணி அதிலும் பாய்ந்தது என அழகுறக் கூறினர்.

நெற்றியில் குவளை மலர் பொருந்தும்படி யணிந்த தையலொருத்தி வையத்தார் உண்ணுங் கடுவிடத்தையுண்ட கண்ணுனை ஒத்தனள் எனவும், கமலப்பூ இரண்டைக் காதிற் பெய்த ஒரு பெண் மூன்று முகத்தையுடையவள் போன்றாள் எனவும், தன்னுடன் நீராடி பெழுந்த தன் மனையாள் முகத்தைத் தாமரையென்றயிர்த்து அவளைக்காணவில்லையென்று ஒருவன் அயிர்த்தான் எனவும் சிறப்பாகக் கூறியிருக்கின்றார்.

சூதாடலின் தீமையைப் புலவர் மிகச் சிறப்பாக எடுத்து விளக்கியிருக்கிறார். செம்மை நினையாமை பூண்டார் நெறி காதல், கவருடல், கள்ளுண்டல், பொய் மொழிதல், ஈதன் மறுத்தல் என்பன. இவற்றில் கவருடல் அறத்தை வேர்கல்லும் அருநரகில் சேர்க்கும், அருளைத் தேய்க்கும். கோபத்தையுண்டாக்கிக் கெடுதியைச் செய்யும். அழகையழிக்கும், உண்மையையும் உயர்வையும் அழிக்கும், மானஞ் சிதைக்கும், அன்பையழிக்கும். ஆயம் பிடித்தார் பொது மகளிர் நேயம் பிடித்தார் போல் மனதில் மாயம் பிடித்தசோ யாவர் என்பன.

அன்பர்களே! இவ்வுரைகள் எங்களுக்குச் சூதாடலை எவ்வளவு கொடிய செயலாகக் காட்டுகின்றன. இவற்றிலும் பார்க்கச் சூதின் கொடுமையை இவ்வளவு சுருக்கமாக எடுத்துரைக்க யாரால் முடியும்.

இச் சூதின் தன்மையைப் புகுமிடத்தும் புலவர் முதலாவது செம்மை நினையாமை பூண்டார் நெறியெனக் கூறினர். களவைச் செம்மனத்தான் எனப் பலவிடங்களிலும் மேம்படுத்துரைத்த அவர் இவ்விடத்து அதனை விதந்து காட்டியதிலும் ஓர் நயம் இருக்கிறது. செம்மை நினையாமை பூண்டார் நெறிவழிச் செம்மையுடையான் ஒழுகினமை பண்டை விதியின் பயனே! என்பது தொனிப்பதை யறியும் பொழுது புலவரின் புலமை—கவிஞானம்—எத்தகையதென்று எடுத்துரைக்க ஒண்ணுமா?

புதல்வர்களின் பெருமையையும் புலவர் கூறியிருப்பதீண்டு கவனித்தற்குரியது. செய்தவ மெத்தனை செய்தாலும் மைந்தர் மகப் பெருமானிடர்கள் வானவர் தம்மூர்க்குப் புகப்பெறார்.

இன்னடிசில்புக்களையும் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்பவாய் மக்களையிங்கில்லாதவர். பொன்னுடையவரேனும் புகழுடையவரேனும் ஒன்றுமுடையால்லர்.

"சொன்னகலையின்துறை யனைத்தும்
தோய்ந்தாலும்
என்னபயனுடைத்தாமின்முகத்து
—முன்னம்
குறுகுதலைக்கிண்கிணிக்கால்
கோமக்கள்பால்வாய்
சிறுகுதலைகோளாச்செவி"

என்றிவ்வாறெல்லாம் மூன்று வெண்பாக்களில் புலவர் வள்ளுவர் புதல்வரைப் பெறுதல் என்னும் அதிகாரத்தில் கூறியவற்றைச் சுருக்கிக்கூறியிருக்கின்றனர்.

"பொன்னுடையரேனும்
புகழுடையரேனுமற்
றென்னுடையரேனுமுடைய ;
ரோ—இன்னடிசில்
புக்களையும்தாமரைக்கைப்
பூநாறும்செய்யவாய்
மக்களையிங்கில்லாதவர்"

எனும் நமது புலவரது செய்யுளைப் படிக்கும்பொழுது,

"படைப்புப்பலபடைத்துப்
பலரோடுண்ணு
முடைப்பெருஞ்செல்வராயி[illegible]
மிடைபடக்
குறுகுறு நடந்து
சிறுகைநீட்டி
யிட்டுக் தொட்டுக்
கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசில்
மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை
யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்
தாம் வாழு நாளே"

எனும் பாண்டியன் அ[illegible]
பின் செய்யுள் நினைப்பு[illegible]
றது. இவ்விரண்டி[illegible]
தாலென்னே! ஒரு[illegible]
அறிவுடை நம்பியின்[illegible]
தாண்டிவத்தெடுத்தன[illegible]

* மங்கை பொருத்திமலர்கொய்வாள்
வர்ண்முகத்தை
பங்கயமென்றெண்ணிப்
படிவண்டைச்—செங்கையால்
காத்தாளக் கைமலரைக்
காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து.

—புகழேந்தியார்.

* [illegible] குளசதம் பூவா
[illegible]களிலங்கள் குவளையோடு
மதிநுதல் [illegible] பூப்பநோக்கிய
மாலைத்தும்பி
அதிசய மெ[illegible]புக்கு வீழ்ந்தன
வலைக்கப்போகா
புதியன [illegible]ண்டபோழ்து
விடுவரோ புதுமைபார்ப்பார்.

—கம்பர்.

## ஆரோக்கிய லேகியம்,

சிறந்த மலசுத்தி ஔஷதம்

மலபந்தமே உங்களின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி கிரமமாய் மலங்கழியும்; சோம்பல் நீங்கும்; தினசரி அலுவல்களுக்கு உற்சாகம் உண்டாகும்.

இன்னும் நித்திரை க்ஷீணம், நீருடன் க்ஷீணமாதல், உடம்பு இளைத்து வருதல், கை காலெரிவு, குடைச்சல், நீங்கும். பத்தியமில்லை.

20 ரூபா எடையுள் விலை ரூ. 2-00 தபால்செலவு சதம் 75.

### நீரழிவுக்கு.

அப்ரேக் செந்தூரம் கைகண்ட மருந்து.

பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் ஊசி நுழையும்படியான சிறிய துவாரங்கள் போட்டு அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் செந்தூரம் ஒரு விட்டி எரிந்து போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும். அதேபோல் நீரழிவில் அளவுமீறி ஓடும் நீரைக் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வரட்சி இவைகளைக் குணமாக்கும்.

20 நாள் மருந்து விலை ரூபா 12-50 சதம்.

ஸ்பெஷல் அநுபானம் சதாவாரி லேகியம் ரூபா 4-50.

### தங்கபஸ்பம்.

தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்.

மெலிந்த தேகத்தைப் போஷித்து சரீரத்தில் புதியாத்தத்தை ஊறச்செய்து அளவற்ற பலம், ஆண்மை வீரிய விர்த்தி உண்டாக்கும். பத்தியமில்லை. (விபரமான கேட்லாக் இலவ.)

30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அநுபானம் லேகியம் ரூபா 2-50.

வெளிநாட்டு நண்பர்கள் ஆர்டருடன் முன்பணமனுப்ப வேண்டும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26 10-36 வி (Palni S. I.)


## 100 வயதுப் பெண்ணின் கர்ப்பம்

18-வது நூற்றாண்டில் ஓர் போலந்துப் பெண் தன்னுடைய 99 வது வயதில் 105வயதுள்ள ஓர்மனிதனை மணஞ்செய்து கொண்டாள். 100 வயதானதும் அப் பெண் கர்ப்பவதியானாள். புருஷனுடன் வாழ்ந்த 15 வருடங்களில் அவள் மூன்று குழந்தைகளைப் பெற்றாள்.

### அறிவித்தல்

இதனை தெல்லிப்பளை வசிக்கும் காரை நிலு மேற்கு இராமலிங்கம் நாகலிங்கம் ஆகிய நான் அவ்வூர் கந்தையா திருவாதர் 1936 ம் ஆடி பங்குனிமீ 28உ ஆயிரம் ரூபாவுக்கும் வட்டிக்கும் எனக்கு எழுதித்தந்த புரோமிசரி நோட்டை 18-7-36 ல பெரியகடை டவ்சாலையில் இழந்துவிட்டேன்: குறித்த கோட்டு ஒருவருக்கும் சாட்டுதல் செய்யப்படவில்லை. குறித்த கோட்டின்பேரால் குறித்த திருவாதரிடம் அது ரூபா மாத்திரம் பற்றிக் கொண்டு பற்றுச்சீட்டுக் கொடுத்திருக்கிறேனென்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

இ. நாகலிங்கம்,

காரைநகர்,
20 - 7 - 36.
(Mis 91, 27 & 30-7-36)


## Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50. தபாற்கூலி 45 சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை கரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளியேயிருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

### இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று வாக்குறுதிகொடுத்த ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—

வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.

கிளை ஸ்தானம்:—

பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காஸில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.

(H 332, 020-3-36 to 19-9-36)



## N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு,யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள். ஜெர்மனி, ஜப்பான், டச்சு முதலியவிடங்களில்செய்யப்பட்டஉத்தரவாதமுள்ள சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள் வர்ணங்கள், வார்னிஸ், கொழுக்கி ஓடுகள் இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும் எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன. கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால் சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo.

Telephone No. 30.

(Y. 47. 8-2-36—7-2-37) வி



## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான்விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு,சாலாமுஸ்லி,சப்பேமுத்ஸிலிமிஸ்தான், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரசபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுஇன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்துதேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ரூ. தபாற்செலவு பிரத்தியேகம்,

சிங்கப்பூர்பினுங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.

Y46 1-1-36 to 31-12-36) சிலோன்.



## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

(வரைவுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா 25ம்ஆதாயமும்பெறலாம்

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.

வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும். தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால், முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம். உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!!

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1-11-35 to 31-10-36.) வி.



## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்

பாரதநாட்டின்

முதன்மையானதும் சிறந்ததுமான

திவ்விய ஔஷதம்.

மிருகக் கொழுப்பு

கலக்கப்படவில்லை என்பதற்கு

உத்தரவாதம்.

44. 1-1—31-12-36)


வண்ணைநகர்

தையல்நாயகி

கலிவெண்பா

திருவூஞ்சல்

...க்குமாரசுவாமி

...ிருவூஞ்சல்

...பொழுது தெளிவாக ...து ஒரே பிரதியாக ...னன.

...ிலை சதம் 5

மானேஜர்,

...வப்பிரகாசயந்திரசாலை

...ணர்பண்ணை.

### விளம்பரவிகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 3-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் கேட்டுக்கொள்ளும் ... எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன் பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை


### கண்ணோ பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்ரோட் (சரியன் குன்று) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில் இப்பொழுது நேத்திரத்திற்குரிய சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளும் சேர்க்கப்பட்டிருத்தலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணிவரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை சொந்தக்காரர்
த. இராமலிங்கம் வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasalai
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)
Y. 27-5-36 to 30-4-37. (வி)


படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and, on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, July 30th 1936.